Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரெண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்று மூன்றாவது நாளாக
திருமறைக் கலா மன்றம்
தயாரித்து வழங்கும்
காவிய நாயகன்
(திருப்பாடுகளின் காட்சி)
மார்ச் 30,31, ஏப்ரல் 1,3,4, - 2004
(செவ்வாய், புதன், வியாழன், சனி, ஞாயிறு)
மன்ற அரங்கில் - மாலை 7.00 மணிக்கு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம் (சி-2335) - திருமறைக் கலா மன்றம்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 பங்குனி 19 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஸபர் 10 (01.04.2004) வியாழக்கிழமை இதழ்:183

# கருணா குழுவின் அச்சுறுத்தலையடுத்து 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் மட்டக்களப்பிலிருந்து இடம்பெயர்வு!

(மட்டக்களப்பு)

**கருணா குழுவினரின் அச்சுறுத்தலையடுத்து - மட்டக்களப்பிலிருந்து வடபகுதி வர்த்தகர்கள் பெருமளவில் வெளியேறி வருவதாகவும், இதனால் அங்கு பெரும் பதற்றம் நிலவுவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.**

செங்கலடி, களுவாஞ்சிக்குடி, பட்டிருப்பு, கல்முனை ஆகிய பகுதிகளில் வர்த்தக நிலையங்களை நடத்திவந்த வடபகுதி வர்த்தகர்கள், கருணா குழுவின் எச்சரிக்கையை அடுத்து, அங்கிருந்து வெளியேறினர்.

வர்த்தகர்கள் கருணா குழுவின் அலுவலகங்களுக்கு அழைக்கப்பட்டு, மட்டக்களப்பை விட்டு உடனடியாக வெளியேறும்படி அச்சுறுத்தப்பட்டதாகவும், வர்த்தக நிலையங்களின் திறப்புகள் பறிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதையடுத்து சுமார் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட வேறு இடங்களைச் சேர்ந்த தமிழ்மக்கள், மட்டக்களப்பு - அம்பாறைப் பகுதிகளை விட்டு வெளியேறி கொழும்பு, வவுனியா மற்றும் யாழ்ப்பாணப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

இதேவேளை - வடபகுதியைச் சேர்ந்த பல வர்த்தகர்கள் தமக்கு கருணா குழுவால் அச்சுறுத்தல் விடுக்கப்படடிருப்பதாக மட்டக்களப்பு பொலிஸாரிடம் புகார் செய்துள்ளனர்.

பாண்டிருப்பிலுள்ள தர்மரத்தினம் என்பவருக்குச் சொந்தமான வர்த்தக நிலையம் கொள்ளையிடப்பட்டு, அங்கிருந்த பொருள்கள் லொறியில் ஏற்றிச் செல்லப்பட்டதாகவும் உரிமையாளருக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதையடுத்து நேற்றுக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு - அம்பாறை மக்களுக்கு அரசியற்துறையின் வேண்டுகோள்

(கிளிநொச்சி)

கருணா குழுவினரின் அடாவடித்தனத்திற்கு அஞ்சி மட்டு - அம்பாறையை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள உங்கள் அயலவர்கள் - எவ்வித அச்சுறுத்தலுமின்றி பாதுகாப்பாக வாழ்வதற்கு உற்சாகமளியுங்கள் என தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறையினர் மட்டு - அம்பாறை மாவட்ட மக்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பாக விடுக்கப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகத்தால் ஒழுக்காற்று நடவடிக்கையின் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட கருணா என்ற தனிநபர், (12 ஆம் பக்கம் பார்க்க)

## கருணா குழு முக்கியஸ்தர் ஆயுதங்களுடன் கைது!

கருணா குழுவின் முக்கியஸ்தர்களான சச்சிமாஸ்டரும் அவரது குழுவைச்சேர்ந்த மூவரும் நேற்று மட்டக்களப்பு - காத்தான்குடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். போர்நிறுத்த உடன்படிக்கைக்கு முரணான வகையில் ஆயுதங்களுடன் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவினர் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சச்சிமாஸ்டர் என்று அழைக்கப்படும் கணபதிப்பிள்ளை மகேந்திரன், மயூரன் என்று அழைக்கப்படும் சாமித்தம்பி ராஜன், மனோகரன் என்று அழைக்கப்படும் வேளாளர்கோடி கறுப்புமலை சுரேஸ் உள்ளிட்ட நால்வர் கொண்ட குழுவினரே பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து கைக்குண்டுகள் உள்ளிட்ட ஆயுதங்கள் பல மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் நேற்று மட்டக்களப்பு நிதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டவேளை மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி எம். எச்.எம்.அஸ்வர், இவர்களை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் அவர்கள் பயணித்த வாகனத்தையும் தடுத்து வைக்குமாறும் பொலிஸாருக்கு

## கருணாவுடன் இணைந்து— புலிகளுக்கு எதிராகப் போரிடுவது என்ற சோமவன்சவின் திட்டம் அழிவைத் தரும்!



### பிரதமர் ரணில் எச்சரிக்கை

மென்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மாத்தறை சனத் ஜயசூரிய விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதமர் தொடர்ந்து

புலிகளுடன் உயர் மட்டப் பேச்சுவார்த்தைகளை நடத்தி இந்த நாட்டுக்கு நிரந்தர சமாதானத்தையும் நிரந்தர யுத்த நிறுத்தத்தையும் பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையிலேயே தேர்தலொன்றுக்கு முகம்கொடுக்க வேண்டிய

டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவினர் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சச்சிமாஸ்டர் என்று அழைக்கப்படும் கணபதிப்பிள்ளை மகேந்திரன், மயூரன் என்று அழைக்கப்படும் சாமித்தம்பி ராஜன், மனோகரன் என்று அழைக்கப்படும் வேளாளர்கோடி வரதகுமார், குருபரன் எனப்படும்

இவர்கள் நேற்று மட்டக்களப்பு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டவேளை மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி எம். எச்.எம்.அஸ்வர், இவர்களை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் அவர்கள் பயணித்த வாகனத்தையும் தடுத்து வைக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

## சோதனைச்சாவடியை பின்னகர்த்த இணக்கமில்லை!

(பலாலி)

நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேச மக்கள் வாக்களிப்பதற்கு வசதியாக முகமாலையில் உள்ள இராணுவ சோதனைச் சாவடியை பின்நகர்த்துவதற்கு எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

இவ்வாறு பலாலி பாதுகாப்பு நடவடிக்கை தலைமைச் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



(கொழும்பு)

கருணாவுடன் இணைந்து விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போர் நடவடிக்கையில் ஈடுபடவேண்டுமென ஆலோசனை வழங்கிவரும் ஜே.வி.பி. யின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவின் பொறுப்பற்ற பேச்சுகள், நாட்டின் எதிர்காலத்தையே சீரழித்துவிடு

மென்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மாத்தறை சனத் ஜயசூரிய விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதமர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது,

எதிர்வரும் மே மாதம் நாங்கள் புலிகளுடன் உயர் மட்டப் பேச்சுவார்த்தைகளை நடத்தி இந்த நாட்டுக்கு நிரந்தர சமாதானத்தையும் நிரந்தர யுத்த நிறுத்தத்தையும் பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையிலேயே தேர்தலொன்றுக்கு முகம்கொடுக்க வேண்டிய துரதிர்ஷ்டம் எமக்கு ஏற்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு நிலை குறித்து ரணில் ஆலோசனை!

கிழக்கு மாகாணத்தில் அண்மைக் காலமாக இடம்பெற்றுவரும் அசம்பாவிதங்கள் தொடர்பாக நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க போர்நிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவர் மற்றும் இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஆகியோருடன் ஆலோசனை நடத்தினார்.

கொழும்பில் நேற்று பிரதமர் ரணில் நடத்திய விசேட சந்திப்பிலேயே இதுகுறித்து ஆராயப்பட்டது.

இந்தச் சந்திப்பில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் புறுவ்கொவ்டே, இலங்கைக்கான நோர்வே தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், அரச தரப்பில் மிலிந்த மொறகொட, அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ஜாதிக ஹெல உறுமயவை அழிக்க ஜே.வி.பி முனைவதாக குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் சார்பில் போட்டியிடும் புத்தபிக்குகளின் நற்பெயருக்குக் கேடுவிளைவிக்கும் முகமாக அவர்களுக்கெதிராக துரோகச் செயல்களில் ஈடுபட ஜே.வி.பியினர் இரகசியத் திட்டமொன்றைத் தயாரித்துள்ளதாக ஹெல உறுமய குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் ஹெல உறுமயவின் வண.கொட்டபோல அமரகீர்த்தி தேரோ மேலும் தெரிவித்துள்ளதாவது -

புத்தபிக்குகளுக்கு களங்கத்தை ஏற்படுத்துவதில் ஒரு பகுதியாக தேர்தல் தினத்தன்று புத்தபிக்கு போன்ற ஒருவரை மாறு வேடத்தில் வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பி அங்கு குழப்பத்தை ஏற்படுத்தவும் ஜே.வி.பி திட்டமிட்டுள்ளது.

இவ்வாறு புத்தபிக்குகளின் நற்பெயரை கெடுப்பதற்காக தாக்குதலை நடத்திவிட்டு அதனை வெளிநாட்டுத் தொலைக்காட்சியூடாகவும் ஒளிபரப்பத் திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக நாம் ஏற்கனவே தகவல்களைப் பெற்றுள்ளோம்.

அத்துடன், இந்தச் சம்பவத்திறகு பின்னால் ஜே.வி.பி உள்ளதென்பதும் தெரிகிறது.

இதற்கிடையில் கிரிபத்தஹொடபௌத்த விகாரையில் ஜாதிக ஹெல உறுமயவிற்கு ஆசிவேண்டி பூசை நடத்திய அந்த விகாரையின் பிரதம பிக்கு மீது இனந்தெரியாத சிலர் நடத்திய தாக்குதலில் படுகாயமடைந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நிமலராஜன் கொலை சந்தேக நபர் 29 ஆம் திகதிவரை விளக்கமறியலில்!

(யாழ்ப்பாணம்)

பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை வழக்கில் சம்பந்தப்பட்ட முதலாவது சந்தேக நபரான கந்தசாமி ஜெகதீஸ்வரன்ன, எதிர்வரும் 27 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துமாறு யாழ்.மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார்.

நிமலராஜன் கொலைவழ்க்கின் முதலாவது சந்தேகநபர் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு, யாழ். சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார்.

இவரை நேற்று யாழ். மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது, எதிர்வரும் 27 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(முன்னர் வந்த செய்தி உள்ளே)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை.....
எக்ஸ்போஎயார்
EXPOAIR
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
வான் வெளியில் உங்கள் நண்பன்...
your friend in the skies...
email :- jaffna@expoavi.com, reservations@expoavi.com.

# எளிமையாக நடந்துமுடிந்த கச்சதீவு அந்தோனியார் திருவிழா!

கச்சதீவு புனித அந்தோனியாரின் வருடாந்த திருநாள் உற்சவம் நேற்று முன்தினம் மிகவும் எளிமையான முறையில் நடைபெற்றது. இதில் குறைந்தளவான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

கடந்த திங்கட்கிழமை மாலை தமிழ்நாடு பாம்பன் பங்கைச் சேர்ந்த ட.அமல்ராஜ் அடிகளாரால் கொடி யேற்றிவைத்து திருநாள் ஆரம்பமா னது. மறுநாள் திருநாள் திருப்பலி யும், திருச்சொரூப பவனியும் இலங்கை - இந்திய நாட்டு பங்குத் தந்தையர்களால் இணைந்து மேற் கொள்ளப்பட்டது.

இந்தத் திருநாளுக்கென தமிழ் நாட்டில் இருந்து சுமார் 80 இற்கும் மேற்பட்ட பக்தர்களும், 3 பங்குத் தந்தையர்களும் வந்திருந்தனர். இலங்கைப் பகுதியிலிருந்து சுமார் 150 பக்தர்கள் கலந்து திருநாள் சோபை இழந்த முறையில் நடந் தேறியமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் திருநாளை முன்னிட்டு இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த தினமலர், தினமணி, மக்கள் குரல், நக்கீரன், தினவேல் ஆகிய பத்தி ரிகை, சஞ்சிகைகளின் செய்தியாளர் களும் சன் ரீவி, ராஜ் ரீவி ஆகியவற் றின் செய்தியாளர்களும் இலங்கை யின் லக்பிம பத்திரிகையின் செய்தி யாளர்களும் வந்து கச்சதீவு திரு விழாவின் முக்கியத்துவத்தை எடுத் தியம்பியமையும் இங்கே சுட்டிக்காட் டத்தக்கது.

இதேவேளை, திருநாள் திருப் பலி நிகழ்வில் டி.ஐ.பி.ஜெயந்த பரணாதல, ஏ.எஸ்.பி. குலவர்த்தன, கடற்படை அதிகாரி தர்மபிலிய, இராணுவ அதிகாரி சுசில் சந்திர பால ஆகியோர் கடற்படைக் கலம் மூலம் இங்கு வந்து இலங்கை - இந்திய பங்குத் தந்தையர்களுடன் கலந்துரையாடிச் சென்றனர். (113)

## அரச அதிபருக்கு எதிராக உயர்நீதிமன்றில் வழக்கு

யாழ்.நகரப்பகுதி மதுபானச்சாலை உரிமையாளர் ஒருவர் - யாழ்.அரச அதிபர், யாழ்.பிரதேச செயலர் ஆகியோருக்கு எதிராக கொழும்பு உயர்நீதி மன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய் துள்ளார்.

தான் கடந்த 30 வருடங்களாக உரிமம் பெற்று மதுபானச்சாலை நடத்துவதாகவும், இவ்வருடம் தனது வியாபாரத்திற்கான உரிமையை வழங்க அதிகாரிகள் மறுத்துவருவதாகவும் அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

## ஏப்ரல் 30 வரை மீளாய்வு

அண்மையில் வெளியான க.பொ.த சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளை ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிவரை மீளாய்வுசெய்ய லாம் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. ஒரு பாடத்தினை மீளாய்வுசெய்வதற்கான கட்டணம் 100 ரூபா எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட்டன

இந்த ஆண்டு நடைபெறவுள்ள தரம் ஐந்து மாணவர்களுக்கான புல மைப் பரிசில் பரீட்சைக்கான விண் ணப்பப் படிவங்கள் பாடசாலை அதி பர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள் ளது. விண்ணப்பங்களை 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கு மாறு பாடசாலை அதிபர்கள் கேட் கப்பட்டுள்ளனர்

# இடிமின்னல் தாக்கியதில் மூவர் காயமடைந்தனர்!

வீட்டில் தங்கியிருந்தவேளை மின்னல் தாக்கியதில் கல்வியங்காட்டுப் பகுதியில் மூவர் காயமடைந்த சம்பவம் நேற்று நண்பகல் இடம்பெற்றுள் ளது.

கல்வியங்காடு ஆனந்தபுரத்தைச் சேர்ந்த ந.ஜெகதீஸ்வரன் (வயது 28) றதீஸ் கிரிதரன் (வயது 12), வினித் (வயது 8) ஆகிய மூவருமே காயமடைந்தவர்களாவர். வீட்டின் அறை ஒன்றின் யன்னல் ஓரமாக இருந்த வேளை பெரும் இடியுடனான சத்தம் கேட்டதை அடுத்து யன்னல் மற்றும் கூரைப் பகுதி இடிந்து விழுந்ததுடன் இவர்களைத் தாக்கியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த மூவரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர்.

## லான்மாஸ்ரர் இல. 72-1516 கூறுவிலை கோரல்

உடுப்பிட்டி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், உடுப்பிட்டி, வல் வெட்டித்துறை எமது சங்கத்தில் பாவனையிலிருந்த இல.72 - 1516 2 சில்லு உழவுயந்திரம் மட்டும் விற்பனைக்குள்ளது. இதற்கான கூறுவிலை கோரிக்கைகளை 15.04.2004 நண்பகல் 12.00 மணிக்கு பிந்தாமல் தலைவர், உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம், உடுப்பிட்டி. என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும். தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் 2 சில்லு உழவுயந்திரத்திற்கான கூறுவிலைகோரல் எனக் குறிப்பிடவும்.

உழவுயந்திரத்தை பார்வையிட விரும்புவோர் குறித்த தவணைக்கு முன்னதாக தலைமைக் காரியாலயத்தில் காரியாலய நேரத்தில் பார்வையிடலாம்.

தலைவர்,
உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்.
உடுப்பிட்டி.

உடுப்பிட்டி
01.04.2004.

(சி-2388)

## மாநகரசபை - யாழ்ப்பாணம்

### மீள் கேள்வி அறிவித்தல் 2004

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் "இக்ராட்" நிறுவனத்தில் தரம் - 9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் கடைசித்திகதி:- 21.04.2004 பிற்பகல் 2.00 மணி வரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:- 22.04.2004 பி.ப.1.00 மணி
கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் திகதி:- 22.04.2004 பி.ப.2.00 மணி

கேள்வி பத்திரங்கள் யாவும் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு அரக்கு முத்திரை இடப்பட்ட கடித உறையில் வைக்கப்பட்டு **மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்** என முகவரியிடப்பட்டு கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித்திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண் டும். அல்லது இதற்கென இவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படவேண் டும். கேள்விப் பத்திரத்தை கொண்டுள்ள கடித உறையின் இடதுபக்க மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிட வேண்டும்.

| வேலையின் பெயர் | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பு கட்டணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர கட்டணம் வற் உட்பட |
|---|---|---|
| 1. நவீன சந்தையில் 2 மலகூடங்களிற்கு மாபிள் பதித்து வர்ணம் பூசும் வேலை | 2000.00 | 240.00 |

மேலதிக விபரங்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.

(சி-2380)

## பாராளுமன்றப் பொதுத்தேர்தல் - 2004.04.02

### வாக்களித்தலும் விருப்புத்தெரிவித்தலும் பற்றிய சுருக்கமான விளக்கம்

### வாக்குச்சீட்டின் மாதிரிப் படிவம்

| | | |
|---|---|---|
| "அ" கட்சி | சின்னம் | |
| "ஆ" கட்சி | சின்னம் | |
| "இ" கட்சி | சின்னம் | |
| சுயேச்சைக்குழு 1 | சின்னம் | |
| சுயேச்சைக்குழு 2 | சின்னம் | |
| சுயேச்சைக்குழு 3 | சின்னம் | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

01. இது வாக்குச்சீட்டின் மாதிரியொன்று மட்டுமே.
02. அரசியற் கட்சிகளினதும், சுயேட்சைக் குழுக்களினதும் பெயர்கள் அவைகளின் சின்னங்களுடன் மேற்பகுதியில் காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு சின்னத்திற்கும் எதிரே வெற்றுக்கூடொன்று உள்ளது. இதில் ஏதேனுமொரு கூடொன்றில் உங்கள் வாக்கை அடையாள மிடலாம். வாக்களிக்கும்போது நீங்கள் விரும்பும் சின்னத்திற்கு எதிரேயுள்ள வெற்றுக்கூண்டில் "புள்ளடி"யிடல் வேண்டும்.
03. ஒவ்வொரு வேட்பாளருக்கும் பிரித்தொதுக்கப்பட்டுள்ள இலக் கங்கள் முறையே ஒரு வரிசையில் பத்து என்றவாறு கீழ்ப்பகுதியில் காட்டப்பட்டுள்ளது. விருப்பொன்றை அடையாளமிடும்போது நீர் விரும்பும் வேட்பாளர் இலக்கத்தின்மீது உங்களால் "புள்ளடி" இடப் படல வேண்டும். வேட்பாளர்கள் மூவருக்கு மேற்படாத எண்ணிக் கைக்கு அதாவது அவ்விலக்கங்கள் மூன்றுக்கு மேற்படாத எண் ணிக்கை மீது உங்கள் விருப்பினை அடையாளமிடமுடியும்.
04. வாக்கொன்று இல்லாத வாக்குச்சீட்டு செல்லுபடியற்றதாகும். அது எவ்வித பெறுமதியுமற்றதோடு அல்லாமல் நிராகரிக்கவும்படும். ஆகையால் முதலில் வாக்கை அடையாளமிட்டு அதன்பின் விருப்ப மாயின் விருப்புகளை அடையாளமிடுவதே பொருத்தமானது என் பதை தயவுகூர்ந்து நினைவிற்கொள்ளவும்.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய.

தயானந்த திசாநாயக்க,
தேர்தல்கள் ஆணையாளர்.

(சி-2382)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### இதழியல் கலை டிப்ளோமா கற்கைநெறி

ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, அறிவியல், பண்பாட்டு அமைப் பான யுனெஸ்கோவின் முன்னெடுப்பில் இதழியல் கலை டிப்ளோமா கற்கைநெறியை வழங்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் முடிவுசெய் துள்ளது. முழுநேரமாக இக்கற்கைநெறியில் இணைந்து பயில்பவர் கள் ஓராண்டிலும், பகுதிநேரமாகப் பயிலுபவர்கள் இரண்டாண்டிலும் இந்த டிப்ளோமாவைப் பூர்த்திசெய்ய இயலும். வகுப்புக்கள் ஜூம்மா மசூதி ஒழுங்கையில் நிறுவப்பட்டுள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்ச மையத்தில் நடத்தப்பட்டு மே மாதத்தில் வகுப்புக்களைத் தொடங் கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**கட்டண விபரம்**

| | | |
|---|---|---|
| பதிவுக்கட்டணம் | ரூபா | 500 |
| கற்கைநெறிக் கட்டணம் | ரூபா | 4000 |
| மீளப்பெறக்கூடிய வைப்பு | ரூபா | 1000 |

கற்கைநெறிக் கட்டணம் முழுமையாக அல்லது இரண்டு தவணை களில் சமபங்குகளாக - ஒன்று பதிவு மேற்கொள்ளும்பொழுதும், மிகுதி இரண்டாவது பருவம் ஆரம்பிப்பதற்கு முன்பும் செலுத்தப்படல் வேண்டும்.

பகுதி நேர டிப்ளோமா:- முழுநேரப் பத்திரிகையாளர்கள் எவரும் பகுதி நேர டிபளோமா கற்கைநெறியில் சேர்ந்து கற்கலாம். க.பொ.த (சா/த) தேர்ச்சியுடன் ஓராண்டு இதழியல்துறை அனுபவம் அவசியம். தெரிவு திறமை அடிப்படையில் அமையும்.

முழுநேர டிப்ளோமா:- க.பொ.த (உ/த) தேர்ச்சியும் இதழியல் அனுப வமும் உள்ள எவரும் விண்ணப்பிக்கலாம். தெரிவு திறமை அடிப்ப டையில் அமையும்.

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பல்கலைக்கழகப் பரீட்சைகளும் அனுமதிக்குமான உதவிப் பதிவாளர் பிரிவில் 50 ரூபா கட்டணம் செலுத்திப்பெற்றுக்கொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங் கள் உதவிப் பதிவாளர், கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம எனும் முகவரிக்கு 2004.04.30 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கு மாறு அனுப்பிவைக்கவேண்டும்.

பதிவாளர்.
யாழ்.பல்கலைக்கழகம்.

(சி-2381)

கொம்பியூட்டர் பொலிமர் இறப்பர் ஸ்ராம்
இலவசம்
ஆச்சரியமா?
இன்று முட்டாள் தின விளம் பரம் என நினைக்காதீர் 4 ஞாயிறு ஈழநாட்டில் விபர மறியுங்கள்.
(சி-2383)

நிறைஞ்சனாஸ் சங்கானை
சரத் குமார், விக்ரம், தேவயானி நடித்த
விண்ணுக்கும் மண்ணுக்கும்
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00.(பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)
THE ITTALION JOB
(சி-2262)

ராஜா யாழ்ப்பாணம்.
வசீகரன், பூஜா நடித்த

கண்களால் கைது செய்
காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(சி-2263)

புதுவருடத்தை முன்னிட்டு விசேட கழிவு வழங்கல்
- இலவசமாக கண்களைப் பரிசோதித்து நவீனரக பிறேம்களில் தரமான மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளவும்.
- விரும்பிய நிறங்களில் பிளாஸ்ரிக் லென்ஸ் பெற்றுக் கொள்ளவும்.
- இழந்த பற்களுக்கு நிகரான சங்குப் பற்களைப் பெற்றுக் கொள்ளவும்.
- நவீன முறையில் மிதப்புப் பற்களுக்கு கிளிப் போடவும்.
- கட்டுப் பல் சுத்தம் செய்யும் மாத்திரை விற்பனைக்கு உண்டு.

ஸ்ரீக்கணேஷ்
பல் மூக்குக் கண்ணாடியகம்,
566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P - 222 2486

கிளைகள் - இல. 80 K.K.S வீதி, சுன்னாகம். இல. 91 K.K.S வீதி, கொக்குவில். T.P - 222 5233
(சி-2378)

# வடக்கு - கிழக்கு மக்களுக்கு இம்முறை தேர்தல் முக்கியமானது

## பவ்ரல் அமைப்புத் தெரிவிக்கின்றது

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலானது குறிப்பாக வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு அதிமுக்கியத்துவம் வாய்ந்தது என தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (பவ்ரல்) தெரிவித்துள்ளது.

அப்பிரதேசத்தில் வாழும் பல்லாயிரக்கணக்கானோர் 15 வருடங்களுக்குப் பின்னர் முதற்தடவையாக இம்முறை தேர்தலில் வாக்களிக்கவுள்ளனர்.

எனினும் கடந்த சில தினங்களாக அந்தப் பிரதேசங்களில் இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்கள் காரணமாக சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு இடையூறு ஏற்படலாம்.

கடந்த சில தினங்களாக இடம்பெற்ற சம்பவங்களில் அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்கள் பலர் கொல்லப்பட்டனர். அத்துடன் மட்டக்களப்பு தெரிவத்தாட்சி அதிகாரியும் தாக்குதலுக்கு இலக்கானார்.

இதனால் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சுதந்திரமான தேர்தலை நடத்துவதற்கு சகல தரப்பினரும் உதவ வேண்டும் என நிலையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை வடக்கு - கிழக்கு மாகாணத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாக கிழக்குப் பிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர் நெவில் விஜயசிங்க தெரிவித்தார்.

# கொலை அச்சுறுத்தல் குறித்து முன்னரே எச்சரிக்கப்பட்டது

## பொலிஸ் மா அதிபர் கூறுகிறார்

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் ராஜன் சத்தியமூர்த்திக்கு எதிரான கொலை அச்சுறுத்தல் தொடர்பாக, ஏற்கனவே அவருக்கு எழுத்துமூலம் அறிவித்திருந்ததாகப் பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வா தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

ராஜன் சத்தியமூர்த்திக்கு கொலை அச்சுறுத்தல் இருப்பதாக அறிவித்ததை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. அத்துடன், கொலை அச்சுறுத்தலுள்ள ஏழு தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களுக்கு பாதுகாப்பை ஏற்றுக்கொள்ளுமாறு தாம் கோரிய போதும், அதனை அவர்கள் நிராகரித்து வருவதாகவும் தெரிவித்தார்.(01)

# நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக எஸ்.பி.திஸநாயக்க மீது வழக்குத் தாக்கல்

நீதிமன்றினை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் எஸ்.பி.திஸநாயக்க மீது நேற்று முன்தினம் உயர் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. இதனைச் சட்டமா அதிபர் தாக்கல் செய்தார்.

காலி ஹபராதுவப் பகுதியில் கடந்த நவம்பர் மாதம் 3 ஆம் திகதி உயர் நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் பேசியதாக, திஸநாயக்கமீது உளவட்டுன வாசிகள் மூவர் மனுத் தாக்கல் செய்திருந்தனர். இதனை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் - சட்டமா அதிபரின் குற்றப்பத்திரிகையின் அடிப்படையில் அமைச்சரை நீதிமன்றத்தில் விரைவில் ஆஜராகுமாறு உத்தரவு இடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (01)

# மகேஸ்வரன் மீது கொலைமுயற்சி புலிகளுக்குத் தொடர்பில்லை

## பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் மகேஸ்வரன் மீதான கொலை முயற்சிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் எதுவிதத் தொடர்பும் இல்லையென பிரதி பொலிஸ் மா அதிபர் சிறிசேன ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை மகேஸ்வரன் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டின் பின்னணியில் விடுதலைப் புலிகள் இருப்பதாக சந்தேகிப்பதில் அர்த்தமில்லை. விடுதலைப் புலிகளால் நடாத்தப்படும் கொலை முயற்சிகள் நன்கு திட்டமிட்ட முறையில் இதுவரை வெற்றிகரமாகவே நடாத்தி முடிக்கப்பட்டு வந்தமை இதனை உறுதிப்படுத்துகிறது.

இதன்மூலம் விடுதலைப் புலிகள் அல்லாத வேறு ஒரு சக்தியே மகேஸ்வரன் மீதான கொலை முயற்சியின் பின்னணியில் இருப்பதை தாம் உறுதியாக நம்புவதாகவும் சிறிசேன ஹேரத் தெரிவித்தார்.

அத்துடன், இச்சம்பவம் கொழும்பில் போட்டியிடும் தமிழ் வாக்காளர்களிடையேயான தேர்தல் போட்டியின் காரணமாகவே நிகழ்ந்துள்ளதாக தெரிவித்துள்ள பிரதி பொலிஸ் மா அதிபர், இதுவரை 25 இற்கும் மேற்பட்டவர்களிடம் இதுதொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# சிறுமியை வல்லுறவுக்குட்படுத்திய இளைஞருக்கு 27 வருடச் சிறை!

## வவுனியா நீதிமன்றம் தீர்ப்பு

(வவுனியா)

எட்டு வயது மாணவியைக் கடத்தி, கொடூரமான முறையில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி விட்டு தலைமறைவாகியுள்ள இளைஞனுக்கு, நேற்று வவுனியா மேல் நீதிமன்றம் 27 வருட கடுழிய சிறைத தண்டனையை விதித்து வரலாற்றில் முதற் தடவையாக தீர்ப்பு வழங்கியுள்ளது.

தலைமறைவாகியுள்ள எதிரியை உடனடியாகக் கைது செய்யுமாறும் பிடியாணை விதிக்கப்பட்டுள்ளது.

05.07.2000 அன்று பூந்தோட்டத்தில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. பாடசாலையை விட்டு கடும் வெய்யிலில் சிநேகிதியுடன் வந்த போது வழியில் வீடு ஒன்றில் தாகத்திற்கு தண்ணீர் கேட்ட சிறுமி ஒருவருக்கே இந்த அவலம் ஏற்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுமியை மருத்துவ பரிசோதனை செய்த வவுனியா அரச வைத்தியர் பெண் நோயியல் நிபுணர் எம்.எம்.மொகைதீன் சிறுமியின் உடல் உள்ளேயும் வெளியேயும் வல்லுறவு காரணமாக பாரதூரமான காயங்கள் ஏற்பட்டு தசைகள் கிழிந்திருந்ததாகவும், இதனால் 10 தையல்கள் போட்டு 1 பைந்த் இரத்தம் ஏற்றியதாகவும் தமது சாட்சியத்தில் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மாணவி மீது புரியப்பட்ட பாரதூரமான குற்றங்களுக்கு அதிகபட்ச சிறைத்தண்டனையாக 27 வருடங்கள் சிறைத் தண்டனை விதிப்பதாக வவுனியா மாவட்ட மேல் நீதிமன்ற நீதிவான் விஸ்வநாதன் தமது தீர்ப்பில் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு நட்டஈடாக 20 ஆயிரம் ரூபாவும், தண்டப் பணமாக மூவாயிரம் ரூபாவும், எதிரி செலுத்தவேண்டும் என்றும் அவர் உத்தரவிட்டார்.

சிறுமியைக் கடத்தியதற்கு 7 வருட சிறையும், வல்லுறவு கொண்டமைக்கு 20 வருட சிறையும் நட்டஈடு மற்றும் அபராத தொகைகளை செலுத்தத் தவறினால் தலா ஒரு வருடம் சிறைத்தண்டனையும் தனித்தனியே அனுபவிக்கத்தக்க வகையில் தண்டனைகளை நிறைவேற்ற வேண்டும் என்றும் நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

ஒரு வீட்டில் தண்ணீர் கேட்டபோது வீட்டினுள் இருந்து பலவந்தமாக இழுத்த செல்லையா சிவாஜி என்ற 24 வயதுடைய நபர் பாலியல் வல்லுறவு கொண்டார் என்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணை நடைபெற்றபோது, 26.03.01 அன்று எதிரிக்கு மேல் நீதிமன்றினால் பிணை வழங்கப்பட்டிருந்தது. அன்று முதல் எதிரி தலைமறைவாகி இருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

# புலிகளின் பகுதியில் தேர்தல் நடவடிக்கை; கண்காணிப்புக் குழு பார்வையிட்டது!

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் தேர்தல் நடவடிக்கை எவ்வாறு நடைபெறுகிறது என்பது தொடர்பாகவும் வாக்காளர் அட்டைகள் எவ்வாறு விநியோகிக்கப்படுகிறது என்பது தொடர்பாகவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்பாளர்கள் புளியங்குளம், கனகராயன்குளம் ஆகிய பகுதிக்கு சென்று பார்வையிட்டனர்.

விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலனுடன் சென்ற தேர்தல் கண்காணிப்பு குழுப் பிரதிநிதி, வாக்காளர் அட்டை விநியோகம் தொடர்பாகவும், தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பாகவும் மக்களுடன் சந்தித்து அவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து கொண்டனர்.

இதன்போது, தமது கட்டுப்பாட்டு பகுதியின் தேர்தல் நிலைப்பாடுகள் தொடர்பாக விளக்கி கூறியுள்ளதாக வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்தார்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசார இறுதிக் கூட்டம் நேற்று முன்தினம் நல்லூரில் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்ட வேட்பாளர்களையும், பிரமுகர்களையும், நாட்டிய நிகழ்வின் ஒரு காட்சியையும் படத்தில் காணலாம்.

## புலிகளின் இசை நிகழ்ச்சியில்

# அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்ட படையினரிடம் விளக்கம் கோரப்பட்டது

(வவுனியா)

வவுனியா புதுக்குளம் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை விடுதலைப் புலிகளின் மகளிர் பிரிவின் இசை நிகழ்ச்சி நடைபெற்றபோது இராணுவத்தினர் மக்களை அச்சுறுத்தும் பாரிய ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டது. இது தொடர்பாக இப்பகுதி இராணுவத்தினரிடம் வன்னி இராணுவ கட்டளைத் தலைமையகம் விளக்கம் கோரியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புதுக்குளம் பகுதியில் இசை நிகழ்சி நடத்துவதற்குத் தயாரான போது பெருமளவிலான இராணுவத்தினர் வாகனங்களிலும், கவசவாகனங்களுடனும் வந்து மக்களை அச்சுறுத்தும் நடவடிக்கையில் நடந்து கொண்டதாகப் புலிகள் தெரிவித்தனர்.

இதனையடுத்து, புதுக்குளம் கல்மடு இராணுவ முகாமின் பொறுப்பதிகாரியிடம் வன்னி இராணுவக் கட்டளைத் தலைமையகம் விளக்கம் கோரியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தேர்தல் பிரசாரத்தின்போது நிந்தவூரில் கலவரம்!

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பாரிய தேர்தல் வாகன பவனியில் வந்தவர்களால் - மாந்தோட்டம் சந்தியிலிருந்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேர்தல் கிளை அடித்து நொருக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் மாலை 2.30 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தையடுத்து, அந்த வாகன பவனியில் வந்த ஒரு வான் மற்றும் ஒரு ஓட்டோ என்பன இனந்தெரியாதவர்களால் தீக்கிரையாக்கப்பட்டன.

அத்துடன் - வாகன பவனியில் வந்த வாகனங்களின் கண்ணாடிகளும் அடித்து நொருக்கப்பட்டன. வாகன பவனியில் வந்தவர்கள்மீது கல்வீச்சுக்களும் இடம்பெற்றன.


அத்துடன், இந்த வாகன பவனியில் வந்தவர்கள்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் கல்முனைக்குடியைச் சேர்ந்த இளைஞரொருவர் படுகாயமடைந்து நிந்தவூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இவ்வாறு நடந்த களேபரத்தை அடக்குவதற்கு அங்கு வந்த பொலிஸார், கூட்டத்தைக் கலைக்க முற்பட்டு முடியாமற்போகவே, கண்ணீர்ப் புகைக்குண்டுத் தாக்குதலை மேற்கொண்டதுடன், வானத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகமும் செய்து மக்களைக் கலைத்தனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இந்த வாகன பவனியில்- தேசிய ஐக்கிய மக்கள் முன்னணித் தலைவி பேரியல் அஷ்ரப், எச்.எம்.எம்.ஹரீஸ், அதாவுல்லா ஆகியோர் கலந்துகொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (07)

# பாகிஸ்தானுடனான முதல் டெஸ்ட்; இந்தியா வெற்றிபெறும் நிலையில்

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் முல்தானில் நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்ட் போட்டியின் நான்காம் நாளான நேற்று



பாகிஸ்தான் அணி தனது இரண்டாவது இனிங்சில் 9 விக்கெட்டுக்களை இழந்து 207 ஓட்டங்களைப் பெற்று நெருக்கடி நிலையில் உள்ளது.

முன்னதாக தனது முதலாவது இனிங்சை ஆடிய பாகிஸ்தான் அணி - அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 407 ஓட்டங்களை மட்டுமே பெற்று, இந்திய அணி முதல் இனிங்சில் பெற்ற 675 ஓட்டங்களில் 268 ஓட்டங்கள் குறைவாகப் பெற்றது.

இதன்பின் தனது இரண்டாவது இனிங்சைத் தொடங்கி விளையாடிக் கொண்டிருக்கும் பாகிஸ்தான் அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 207 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதன் மூலம் இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கையை எட்டுவதற்கு 61 ஓட்டங்கள் பெறவேண்டும். ஆனால் கடைசி விக்கெட் இணைப்பாட்டமே தற்போது விளையாடிக் கொண்டிருக்கிறது.

பாகிஸ்தான் தனது முதல் இனிங்ஸ் சார்பாக 407 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் இம்ரான் பர்கத் 38, தபீக் உமர் 23, யசீர் ஹமீட் 91, இன்ஸமாம் உல் ஹக் 77, யூசுப் யுகானா 35, அப்துல் ரஸாக் 47 ஆகியோர் குறிப்பிடும்படியான ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் இர்பான் பதான் 4, கும்ளே, டெண்டுல்கர் இருவரும் தலா 2, சகீர்கான், பாலாஜி இருவரும் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பாகிஸ்தான் தனது இரண்டாவது இனிங்சில் நேற்று ஆட்டநேரம் முடிவடையும் போது 9 விக்கெட்டுக்களை இழந்து 207 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இதில் இம்ரான் பர்கத் 24, யசீர் ஹமீட் 23, அப்துல் ரஸாக் 22 ஓட்டங்களையும், யூசுப் யுகானா ஆட்டமிழக்காமல் 152 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 15 பவுண்டரிகள் அடங்கலாக 107 ஓட்டங்களையும் பெற்றனர்.

அத்துடன் அணித்தலைவர் இன்ஸமாம் உல் ஹக், மொகமட் சமி, சக்லைன் முஸ்ரக் மூவரும் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தமையும் குறிப்பிடத்தக்கது.

பந்துவீச்சில் அனில் கும்ளே 6 (இது இவரது 24 ஆவது முறையான 5 விக்கெட்டுக்களை கைப்பற்றலாகும்), இர்பான் பதான், யுவராஜ்சிங் (இது இவரது முதலாவது டெஸ்ட் விக்கெட் - ஆட்டமிழந்தவர் யசீர் ஹமீட்) இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இன்று போட்டியின் இறுதி நாளாகும். பாகிஸ்தான் ஒரு விக்கெட்டை மாத்திரமே கைவசம் வைத்துள்ளது. இந்தப் போட்டியில் இந்திய அணி வெற்றிபெற்றால் முதன் முதலாக டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் மண்ணில் இந்திய அணி பெறும் முதலாவது வெற்றியாக இது அமையும்.

# ராவிட் எடுத்த முடிவுக்கு ஸ்ரீகாந்த் கடும் எதிர்ப்பு!

(புதுடெல்கி)

பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது டெஸ்டின் முதல் இனிங்சில் இந்திய அணி 675 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் - 59 ஓட்டங்களுடன் ஆடிக்கொண்டிருந்த யுவராஜ்சிங் ஆட்டமிழந்ததைத் தொடர்ந்து இந்திய அணித் தலைவர் ராவிட் ஆட்டத்தை இடைநிறுத்தம் செய்வதாக அறிவித்தார்.

ஆட்டத்தை இடைநிறுத்தியபோது மறுமுனையில் டெண்டுல்கர் 194 ஓட்டங்களுடன் ஆடிக்கொண்டிருந்தார். இரட்டைச் சதத்தை எட்ட அவருக்கு மேலும் 6 ஓட்டங்களே தேவைப்பட்ட நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவிக்கப்பட்டதால், டெண்டுல்கர் மட்டுமல்லாமல் ரசிகர்களும் அதிர்ச்சியடைந்தனர்.

ராவிட்டின் இந்த முடிவு குறித்து இந்திய அணியின் முன்னாள் தலைவர் ஸ்ரீகாந்த் கூறுகையில் - என்னைப் பொறுத்தவரை டிராவிட்டின் இந்த முடிவு தவறானதாகும். மாறாக டெண்டுல்கரை இரட்டைச் சதம் அடிக்க விட்டிருக்க வேண்டும் என்றார்.

டெண்டுல்கரின் நண்பரும், முன்னாள் இந்திய வீரருமான வினோத் காம்ப்ளி கூறுகையில் - இது எனக்கு மிகவும் அதிர்ச்சியாக இருந்தது. சிரேஷ்ட வீரர் ஒருவருக்கு இரட்டைச் சதம் குவிக்கும் வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. இது அவரை அவமானப்படுத்தும் செயலாகவே நான் கருதுகிறேன் என்றார்.

# நியூஸிலாந்துடனான டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்க அணி சமன்செய்தது!

(வெலிங்ரன்)

தென்னாபிரிக்காவுக்கும், நியூஸிலாந்து அணிக்கும் இடையே வெலிங்ரனில் நடைபெற்ற மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா ஆறு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுள்ளது.

முன்னதாக தென்னாபிரிக்க அணி நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று களத்தடுப்பில் ஈடுபட்டது.

நியூஸிலாந்து அணி தனது முதலாவது இனிங்சில் 297 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

சின்கிளெயர் 74 ஓட்டங்களையும், கெயின்ஸ் 69 ஓட்டங்களையும் கூடுதலாகப் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் பொலக் மூன்று விக்கெட்டுக்களையும், நிக்கி போஜி 4 விக்கெட்டுக்களையும், என்ரினி, கலிஸ், நெல் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி தனது முதலாவது இனிங்சில் 316 ஓட்டங்களை எடுத்து நியூஸிலாந்து அணியைக் காட்டிலும் 19 ஓட்டங்கள் முன்னிலை வகித்தது.

தென்னாபிரிக்க அணி சார்பில் றுடோல்ப் 93 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொண்டார். கிப்ஸ் 77, வான் ஜார்ஸ்வெல்ட் 59 ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் மார்ட்டின் 5 விக்கெட்டுக்களையும், கெயின்ஸ் 4 விக்கெட்டுக்களையும், ஜேக்கப் ஓரம் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

நியூஸிலாந்து அணி தனது இரண்டாவது இனிங்சில் 252 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.



நியூஸிலாந்து அணியின் சார்பில் ஸ்ரைஸ் மட்டும் 73 ஓட்டங்களை அதிகூடிய ஓட்டங்களாகப் பெற்றார்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணியின் நிக்கி போஜி 4 விக்கெட்டுக்களையும், பொலக், நெல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், என்ரினி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தென்னாபிரிக்க அணி 234 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இரண்டாவது இனிங்சை ஆரம்பித்தது.

நான்கு விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 234 ஓட்டங்களைப் பெற்று டெஸ்ட் போட்டியை தென்னாபிரிக்க அணி வென்றது.

அந்த அணி சார்பில் அணித்தலைவர் ஸ்மித் 125 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொண்டார். ஹரி கேர்ஸ்டன் 76 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் மார்ட்டின் 2, ஓரம், ஸ்ரைஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக ஸ்மித் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்தப் போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் தென்னாபிரிக்க அணி தொடரை 1:1 என்ற அடிப்படையில் சமன் செய்தது.

# டெண்டுல்கருக்கு சார்பாக இன்ஸமாம் கருத்து!



பாகிஸ்தானுக்கு எதிராக முல்தானில் நடைபெற்றுவரும் முதல் டெஸ்டில் டெண்டுல்கர் 194 ஓட்டங்களுடன் இருந்தபோது இந்திய அணித தலைவர் ராவிட் ஆட்டத்தை இடைநிறுத்தம் செய்வதாக அறிவித்தார்.

டெண்டுல்கரின் இரட்டைச் சதத்துக்கு 6 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் ஆட்ட இடைநிறுத்த முடிவை அறிவித்தது மிகுந்த சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. டெண்டுல்கர் வெளிப்படையாக இது எனக்கு அதிர்ச்சியாக இருந்தது என்று கருத்துத் தெரிவித்துவிட்டார். இது தொடர்பாக ராவிட் கடுமையாக விமர்சிக்கப்பட்டு வருகிறார்.

இந்த நிலையில் - டெண்டுல்கருக்கு ஆதரவாக பாகிஸ்தான் அணித்தலைவர் இன்ஸமாம் கருத்துத் தெரிவித்துள்ளார். டெண்டுல்கரை இரட்டைச் சதம் அடிக்க விட்டிருக்கவேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

இன்ஸமாம் கூறும்போது - பாகிஸ்தான் இதே சூழ்நிலையில் ஒரு வீரர் இருந்தால் அந்த வீரரை நான் இரட்டைச் சதம் அடிக்க வாய்ப்புக் கொடுத்திருப்பேன் என்றார். இந்திய அணியின் நிர்வாகம் எடுத்த முடிவு குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

ராவிட்டின் ஆட்ட இடைநிறுத்த முடிவுக்கு ஆதரவாக பாகிஸ்தான் பத்திரிகைகள் கருத்து வெளியிட்டுள்ளன.

# அவுஸ்ரேலிய நடுவரின் மீது பாகிஸ்தான் அணி புகார்!

(முல்தான்)

இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்டில் பாகிஸ்தான் அணித்தலைவர் இன்ஸமாம் மற்றும் யுகானா ஆகியோருக்கு நடுவர் ஆட்டமிழப்பு கொடுத்தது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இன்ஸமாம் கும்ளே பந்தில் ஆகாஷ் சோப்ராவிடமும், யுகானா சகீர்கான் பந்தில் பார்த்தீவ் பட்டேலிடமும் பிடிகொடுத்து ஆட்டமிழந்தனர்.

இந்த இரண்டு ஆட்டமிழப்பையும் அவுஸ்ரேலிய நடுவர் சைமன் தப்பெல் கொடுத்தார். இந்த ஆட்டமிழப்பு தொடர்பாக சைமன் மீது பாகிஸ்தான் அணி நிர்வாகம் குற்றம் சாட்டியுள்ளது. போட்டி நடுவர் மடுகல்லேயிடம் இது தொடர்பாக புகார் செய்துள்ளது.

இன்ஸமாம் இது தொடர்பாக நிருபர்களிடம் கூறும்போது - வீரர்களின் நடத்தை விதிப்படி நடுவரின் முடிவு குறித்து கருத்துத் தெரிவிக்க இயலாது. ஆனால், நீங்கள் இதைப் பார்த்திருப்பீர்கள். நீங்கள் முடிவு செய்து கொள்ளுங்கள் என்றார். பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் சகாரியாகான் கூறும்போது - நடுவரின் முடிவை நாங்கள் மதிக்கிறோம் என்றார்.

விளையாட்டு

# சுப்பிரமணியம் சுவாமி தலைமையில் 4 ஆவது அணி தமிழகத்தில் உதயம்!

(சென்னை)

சுப்பிரமணியம் சுவாமியின் ஜனதாக் கட்சி, ஏ.சி.சண்முகத்தின் புதிய நீதிக் கட்சி ஆகியவை இணைந்து புதிய கூட்டணியை உருவாக்கியுள்ளன. இந்தக் கட்சிகள் தமிழகத்தில் 31 தொகுதிகளில் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளன.

கடந்த சட்டசபைத் தேர்தலின் போது உதயமான புதிய நீதிக் கட்சியும், சுப்பிரமணியம் சுவாமியின் ஜனதாக் கட்சியும் இணைந்து புதிய கூட்டணி அமைத்துள்ளன.

புதிய நீதிக் கட்சியின் தலைமைக் கழக அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சியில் இதற்கான அறிவிப்பை சுவாமியும், ஏ.சி.சண்முகமும் வெளியிட்டனர். பின்னர் புதிய நீதிக் கட்சியின் தேர்தல் அறிக்கையை சுவாமி வெளியிட்டார்.

ஏ.சி.சண்முகம் செய்தியாளர்களிடம் பேசுகையில் - ஜனதாக் கட்சியின் ஏர் உழவன் சின்னத்தில் 31 தொகுதிகளில் எங்களது கூட்டணி போட்டியிடுகின்றது. சுவாமி மதுரையில் போட்டியிடுகிறார். அவரைப் பொது வேட்பாளராக அறிவிக்க அனைத்துக் கட்சிகளும் முன்வர வேண்டும்.

முதல்வர் ஜெயலலிதா, தி.மு.க தலைவர் கருணாநிதி ஆகியோர் பிரசாரத்தைத் தொடங்கிய சென்னை கடற்கரை குடிசை மாற்று வாரிய அலுவலகம் முன்பிருந்து எனது பிரசாரத்தை ஏப்ரல் 7 ஆம் திகதி தொடங்குகிறேன் என்றார் ஏ.சி.சண்முகம்.

பின்னர் சுவாமி பேசுகையில், தமிழகத்தில் மட்டுமல்லாது - ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களிலும் ஜனதாக் கட்சி போட்டியிடுகிறது. 15 இற்கும் மேற்பட்ட எம்.பி தொகுதிகளை வெல்வோம். எங்களது தயவு இல்லாமல் யாரும் ஆட்சியமைக்க முடியாது என்ற நிலையை ஏற்படுத்துவோம்.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கு இந்தியக் குடியுரிமை கொடுக்கப்பட்டிருந்தாலும் அதை ரத்துச்செய்ய முடியும். அவரால் இந்தியாவின் பிரதமராக முடியாது. அவரது பிள்ளைகள் ராகுல், பிரியங்கா இருவரும் 1992 ஆம் ஆண்டு இத்தாலி நாட்டு குடியுரிமை பெற்றுள்ளனர்.


காங்கிரஸ் கட்சிக்கு 100 இடங்கள் கூடக் கிடைக்காது. அதேபோல் பா.ஜ.கவுக்கும் 150 தொகுதிகளுக்கு மேல் கிடைக்காது என்று சுப்பிரமணியம் சுவாமி மேலும் தெரிவித்தார்.

தி.மு.க, அ.தி.மு.க கூட்டணி தவிர மக்கள் கூட்டணி என்ற பெயரில் தலித் கட்சிகள் இணைந்த கூட்டணி உள்ளது. இந்த நிலையில வாக்கு வங்கியே இல்லாத சுவாமியும், ஏ.சி.சண்முகமும் இணைந்து புதிய கூட்டணியை ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# நடிகை விஜயசாந்தியை கைகழுவியது பா.ஜ.கட்சி

(புதுடெல்கி)

ஐதராபாத்தில் பாரதீய ஜனதா வேட்பாளராக போட்டியிட நடிகை விஜயசாந்திக்கு இடம் கொடுக்கப்படவில்லை.



ஆந்திர மாநிலம் ஐதராபாத்தில் நாடாளுமன்றத் தொகுதியில் பாரதீய ஜனதா கட்சி வேட்பாளராக பிரபல நடிகை விஜயசாந்தி நிறுத்தப்படுவார் என்று கூறப்பட்டது.

கர்நாடக மாநிலம் பெல்லாரியில் சோனியா காந்தியின் மகள் பிரியங்கா காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிட்டால் அவரை எதிர்த்தும் நடிகை விஜயசாந்தி போட்டியிடுவார் என்றும் செய்தி வெளியானது.

ஆனால், பெல்லாரி தொகுதியில் பிரியங்கா போட்டியிடவில்லை என்று நேற்று அறிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஐதராபாத்தில் பாரதீய ஜனதா வேட்பாளராக போட்டியிட நடிகை விஜயசாந்திக்கு இடம் வழங்கப்படவில்லை என்று பாரதீய ஜனதா நேற்றுமுன்தினம் திடீரென்று அறிவித்துவிட்டது.

நடிகை விஜயசாந்தி பல தொகுதிகளிலும் பிரசாரம் செய்ய வேண்டியிருப்பதால் கட்சியின் நலன் கருதி இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது. நடிகை விஜயசாந்தி ஆந்திராவில் மட்டுமன்றி, கர்நாடகத்திலும் மற்றும் பல முக்கிய தொகுதிகளிலும் பாரதீய ஜனதா வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## சின்னஞ்சிறு செய்திகள்

### கணிப்பீட்டு புள்ளிகளை அனுப்பிவைக்கவும்

2004 டிசம்பர் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கு முதன் முறையாகத் தோற்றுகின்ற மாணவர்கள் பாடசாலை மட்டக் கணிப்பீட்டில் பெற்ற புள்ளிகளை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கான படிவங்கள் பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இப்படிவங்களில் தரம் 10 இல் மூன்று தவணைகளினதும் தரம் 11 இன் முதல் இரண்டு தவணைகளினதும் கணிப்பீட்டுப் புள்ளிகள் உரிய காலத்தில் பதியப்படவேண்டும் என - வலயக் கல்விப் பணிப்பாளர்களினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (122)

### 285 குடும்பங்களுக்கு நுளம்பு வலை

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் மலேரியா நோயிலிருந்து மக்களை விடுவிக்கும் நோக்கத்துடன் 285 குடும்பங்களுக்கு நுளம்புவலை விநியோகிக்கப்பட்டது.

இந்தப் பிரதேசத்திலுள்ள கோயில் வயல், சங்கத்தார்வயல், பனிக்கையடி, இயக்கச்சி வை.எம்.சி.ஏ. திட்டப்பகுதி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு - மாவட்ட சுகாதார வைத்திய பணிமனையினர் இவற்றை வழங்கினர். (112)

### ஒயிலில் சறுக்கி வீழ்ந்து ஒருவர் காயம்

(வடமராட்சி)

பருத்தித்துறை - யாழ் வீதியில் மாலு சந்திக்கு அருகிலுள்ள வீதியில் கீறியிருந்த தேர்தல் சின்னத்தை இரவுவேளை ஒயில் ஊற்றி அழித்திருந்தார்கள்.

அவ்வேளையில் மந்திகை வைத்தியசாலையில் வேலை செய்யும் ஊழியர் ஒருவர் அதிகாலையில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது, ஒயிலில் சறுக்கி விழுந்து காயமடைந்தார்.

புலோலி தெற்கைச் சேர்ந்த நாகமுத்து புவனேசன் என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவர். இவர் சிகிச்சைக்காக மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (17)

# தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து சரித்திரம் படைக்க வாக்களிக்கவேண்டும்!

## யாழ். ஆயர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

தமிழ்மக்கள் அமைதியான சமாதானத்தை விரும்புகிறார்கள் என்பதை சர்வதேசத்திற்கு வெளிக்காட்ட அனைவரும் ஒன்றிணைந்து சரித்திரம் படைக்க தேர்தலில் வாக்களிக்கவேண்டும்.

இவ்வாறு யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தமிழ்மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

எதிர்வரும் பொதுத்தேர்தல் குறித்து நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் இந்தவேண்டுகோளை விடுத்தார். அந்தச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

இன்னும் சில தினங்களில் நடைபெறவிருக்கும் 13 ஆவது பொதுத் தேர்தல் - தமிழ்மக்களைப் பொறுத்தவரை முக்கியமானதொரு காலகட்டத்தில் நடைபெறும் தேர்தலாகும். இந்த நாட்டில் தமிழ்மக்களின் எதிர்காலத்தை மிக உறுதியாக எழுதப்போகும் தேர்தல் இதுவாகும்.

சுதந்திரமாக வாக்களிப்பது எல்லா மக்களுக்குமான ஒரு ஜனநாயக உரிமை. இந்த உரிமையைச் சரியான விதமாகப் பயன்படுத்தவேண்டிய கடமை எல்லோருக்கும் உண்டு.

தமிழ் மக்கள் இந்தப் பொன்னான வாய்ப்பை நழுவவிடாமல் அனைவரும் நேர்மையான வாக்களிப்பில் ஈடுபடவேண்டும்.

போரை அல்ல அமைதியையும் சமாதானத்தையுமே தமிழ்மக்கள் விரும்புகின்றார்கள் என்பதை முழுசர்வதேச உலகிற்கும் வெளிக்காட்டத் தமிழ்மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து சரித்திரம் படைக்க வாக்களிப்பில் ஈடுபடவேண்டும் என விரும்புகின்றோம்.

யாரும் வாக்களிப்பில் ஈடுபடாமல் இருக்கவேண்டாம். குறிப்பாக இடம்பெயர்ந்தவர்கள் விசேட வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்லவேண்டி இருப்பதனால், இந்தச் சிரமங்களைக் கண்டு பின்வாங்காமல், இவ்விடங்களுக்குத் தவறாமல் சென்று வாக்களிப்பில் ஈடுபட வேண்டுகிறோம்.

வாக்குகளை அளிக்கும்போது - தேசிய நலனைக் கருத்தில்கொண்டு, தகுந்த பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய வேண்டும் என்பதை மறந்துவிடவேண்டாம்.

தமிழ் மக்கள் அனைவரும் அரசைத் தீர்மானிக்கும் சக்தியாக மாறியுள்ள இந்தவேளையில், எமது வரலாற்றை நாமே எழுத உறுதியாக ஒன்றிணைவோம்.

சமாதானத்தின் பாதையை முன்னெடுத்துச்செல்லும் ஆணையைத் தெரிவுசெய்யப்பட்ட அரசிற்கு வழங்க இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவோம்.

யுத்தத்தை வெறுத்து சமாதானத்தை மளக்கொண்டு வரும் தமிழ்மக்களின் விருப்பம் இந்தத் தேர்தல்மூலம் தெளிவாகத் தெரியப்படுத்தப்படல்வேண்டும்

இதற்குரிய விதமாக தூரநோக்குடனும், துணிவுடனும் நாம் செயற்படவேண்டும்.

எவ்வித வற்புறுத்தலுமின்றி சுதந்திரமாக மக்கள் வாக்களிக்கின்றார்கள் என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

அதிகார துஷ்பிரயோகம், ஆள்மாறாட்டம், அரசியல் வன்முறை, பயமுறுத்தல், கள்ளவாக்கு போன்ற தவறான செயல்கள் நடைபெறாமல் இருப்பதை அதிகாரிகள் உறுதிப்படுத்தவேண்டும்.

தேர்தலில் வாக்களிக்காது இருத்தல், சரியான மனத்தெளிவின்றி வாக்களித்தல், முறையற்ற வாக்களித்தலில் பங்குகொள்ளமுற்படல் என்பன எல்லாம் ஜனநாயக தோதல் வழிமுறைகளுக்கு ஒவ்வாதவை.

வன்முறைகளற்ற தேர்தலாக இந்தத் தேர்தல் அமைய அனைவரதும் ஒத்துழைப்பைவேண்டி நிற்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## தெல்லிப்பளை - வட்டுக்கோட்டை

# பொலிஸ் காவலரண்கள் தரம் உயர்த்தப்பட்டது

தெல்லிப்பளை மற்றும் வட்டுக்கோட்டையிலுள்ள பொலிஸ் காவலரண்கள் - பொலிஸ் நிலையங்களாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளதாகப் பொலிஸ் மா அதிபர் இந்திர டி சிலவாவினால் வர்த்தமானிமூலம் அறிவிக்கப்பட்டது.

இதேபோன்று அம்பாறை மாவட்டத்திலுள்ள - சவக்கடை, பதியத்தலாவ, திருக்கோயில் காவலரண்களும், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காத்தான்குடி காவலரணும், திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கோமரவன்கடவல, தம்பலகாமம் காவலரண்களும் 'சீ' தரத்திலான பொலிஸ் நிலையங்களாகத் தரமுயர்த்தப்பட்டன.

இதுதவிர, அம்பாறை மாவட்டத்திலுள்ள நிந்தாவூர் பிரதேசத்தில் புதிய பொலிஸ் நிலையமொன்றை அமைப்பதற்கும் இறக்காமம், மருதமுனை, ஒலுவில் பொலிஸ் காவலரண்களும் - பொலிஸ் நிலையங்களாகத் தரமுயர்த்தப்படுவதற்கும் அம்பாறை பொலிஸ் அத்தியட்சகரினால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய கணினிக் கற்கை மைய திறப்பு வழாவில் யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் மங்கள விளக்கேற்றுவதையும், அருகே கல்லூரி அதிபர் வி.மாணிக்கம் நிற்பதையும் படத்தில்காணலாம்.



தொண்டமனாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலயத்தில் கல்விகற்கும் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மாணவர்களுக்கு - சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையினால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதில் கற்றல் உபகரணங்கள் பெற்ற மாணவர்கள் ஒரு தொகுதியினரையும் ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.

# 39 இந்திய மீனவர்களுக்கு நிபந்தனையுடன் பிணை அனுமதி

## யாழ். மேல்நீதிமன்றம் விதித்தது

வடபகுதிக் கடற்பிரதேசத்தில் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கைதுசெய்யப்பட்ட பின்னர், யாழ் சிறைச்சாலையில் விளக்கமறியலில் இருந்த 39 இந்திய படகோட்டிகளும் நேற்றுமுன்தினம் நிபந்தனையுடன் பிணையில் செல்ல யாழ்.மேல் நீதிமன்றம் அனுமதித்தது.

யாழ்.மேல்நீதிமன்ற நீதிவான் கே.பி.எஸ்.வரதராஜா முன்னிலையில் நடந்த இந்த வழக்கு விசாரணையில், இந்திய படகோட்டிகள் சார்பாக மு.திருநாவுக்கரசும், அரச சட்டவாதியாக சுகந்தி கந்தசாமியும் ஆஜரானார்கள்.

இந்திய படகோட்டிகள் சார்பாக அரசதரப்பால் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி மு.திருநாவுக்கரசு தனது வாதத்தில் -

கைதுசெய்யப்பட்ட இந்தப் படகோட்டிகள் சிறையிலுள்ளதால் அவர்களது குடும்பங்கள் வறுமையில் வாடுவதாகவும், தவறுதலாகவே அவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் பிரவேசித்தார்கள் எனவும், எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகளை அவர்கள் செய்யமாட்டார்கள் எனவும் தெரிவித்தார்.

அவர்களைக் கருணைகூர்ந்து விடுதலை செய்யுமாறு நீதிமன்றத்தை வேண்டுவதாகவும் தெரிவித்தார். ஆனால், அரச சட்டத்தரணி சுகந்தி கந்தசாமி தனது வாதத்தில் - எமது நாட்டு கடல் எல்லைக்குள் அத்துமீறி இவர்கள் பிரவேசித்தது மிகவும் பாரதூரமான குற்றமாகும். இந்தக் குற்றச்சாட்டுக்கு ரூபா பதினைந்து லட்சம் குற்றப்பணமாக விதிக்கலாம். எனவே, இந்தக் குற்றச்சாட்டைக் கருத்தில்கொண்டு உரிய தண்டனை விதிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

இவர்கள் இருவரது வாதங்களையும் கேட்டறிந்த நீதிவான் - எதிரிகளுக்குத் தலா ஐம்பதினாயிரம் தண் டப்பணம் விதித்ததுடன், தண்டப் பணம் செலுத்தத் தவறின் பத்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஐந்து வருட கடூழிய சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டுமென்றும், இவர்களால் பாவிக்கப்பட்ட விசைப் படகுகள், வலைகள் மற்றும் உபகரணங்கள் பறிமுதல் செய்யப்படுமென்றும் தெரிவித்தார்.

அத்துடன், குறித்த மீனவர்களின் கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்யுமாறும் பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார். (202)

# நிமலராஜன் படுகொலை; முதலாவது சந்தேகநபர் கைது!

பத்திரிகையாளர் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக நிதிமன்றில் ஆஜராகாது, தலைமறைவாக இருந்த ஈ.பி.டி.பி. கட்சியின் உறுப்பினர் கந்தசாமி ஜெகதீஸ்வரன் - நேற்றுமுன்தினம் ஊர்காவற்துறையில் வைத்துப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

நிமலராஜனின் படுகொலைச் சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட ஈ.பி.டி.பி. கட்சியின் ஐந்து உறுப்பினர்கள் விசாரணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் ஐவரில் ஜெகதீஸ்வரன் - நீதிமன்றத்திற்கு ஆஜராகாது தலைமறைவாக இருந்துவந்தார். இவரைக் கைதுசெய்யுமாறு யாழ்.நீதிமன்றம் அண்மையில் உத்தரவு பிறப்பித்திருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய பொலிஸார் - இவரைக் கைதுசெய்து ஊர்காவற்துறை நீதிமன்றில் ஆஜர்செய்தனர்.

இவரை யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்குமாறு ஊர்காவற்துறை நீதிவான் அ.பிரேம்சங்கர் - பொலிஸாருக்கு உத்தரவிட்டதுடன், கைதுசெய்யப்பட்ட தகவலை யாழ்நீதிமன்றத்திற்குத் தெரியப்படுத்துமாறும் பணித்திருந்தார்.

இவர் கைதுசெய்யப்பட்ட தகவல், யாழ்.நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டதையடுத்து, இன்று நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு யாழ்.நீதிவான் இ.த.விக்கினராஜா உத்தரவிட்டார். (202)


## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### நான்காவது அகவையில்



பெயர் : க.கிஷோதரன்
முகவரி : நாகர்கோவில், மேற்கு நாகர்கோவில்.

### ஐந்தாவது அகவையில்



பெயர் : தி.சத்யா
முகவரி : திருவந்தோட்டம் கொற்றாவத்தை.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:---------------------

முகவரி :-----------------

பிறந்த ஆண்டு:---


கூப்பன்கள் புகைப்படமு இணைக்கப்



பெற்றோர் ஒப்பம்



## தொழில் மலர்



கனகசிங்கம்

# நவீனமயப்படுத்தப்பட்ட வங்கிச் சேவையை அறிமுகப்படுத்திய பெருமை செலானைச்சாரும்

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் வங்கிகளில் ஒன்றான செலான் வங்கிமுகாமையாளர் கனகசிங்கம் அவர்களை வங்கி நடவடிக்கை தொடர்பான பேட்டி ஒன்றினை தொழில் மலருக்கு எடுப்பதற்காக தீர்மானித்தோம். இது சம்பந்தமாக கடந்த வாரம் அவருடன் தொலைபேசியில் கதைத்து நேரத்தை ஒதுக்கிக்கொண்டோம். கடந்த 24ஆம் திகதி மதியம் 1மணி அளவில் இதற்கான ஆயத்தங்களுடன் வங்கிக்குச் சென்றேன். முகாமையாளர் புன்முறுவலுடன் என்னை வரவேற்றார். என்னை அறிமுகம் செய்துகொண்டு கைகுலுக்கலுடன் நான் சென்ற நோக்கத்திற்கான கேள்வியைத் தொடுத்தேன் எனது முதலாவது கேள்வியாக...

**கேள்வி :** யாழ்ப்பாணத்தில் செலான் வங்கி ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடங்களை பூர்த்தி செய்யும் தருவாயில் இருக்கின்றது. அந்த வகையில் இந்தப் பிரதேச மக்களுக்கு தங்களால் செய்த சேவைகளையும் மக்கள் மத்தியில் எவ்வாறான வரவேற்புக்கள் காணப்படுகின்றது என்பதைக் கூறமுடியுமா?

**பதில் :** ஆம் யாழ்ப்பாணத்தில் எமது சேவை எனும் பொழுது 60 வருடங்களுக்கு மேலாக இந்தப் பிரதேசத்தில் வேறு வங்கிச்சேவைகள் நடந்தாலும், நவீன மயப்படுத்தப்பட்ட வங்கிச்சேவை ஒன்றினை இப்பிரதேசத்தில் முதல் முதலில் அறிமுகப்படுத்திய பெருமை எமக்குரியது. இதன் பின்புதான் இதரவங்கிகள் எம்மைப் போன்று நவீனமயப் படுத்தப்பட்ட வங்கிச் சேவையை ஆரம்பித்தது. அதாவது, குளிரூட்டப்பட்ட கணினி வலையமைப்பு (**A.T.M.** இயந்திரம்) கொடுக்கல் வாங்கல் செய்யும்முறையை அறிமுகப்படுத்தியுள்ளோம். எமது வங்கியில் கணக்கு வைத்திருக்கும் ஒருவர் இலங்கையிலுள்ள எந்தப் பிரதேசத்திலுமிருந்து 24 மணி நேரமும் **ATM** அட்டையைப் பயன்படுத்தி பணத்தை பெறக் கூடியவகையில் இலகுவாக்கியுள்ளோம். அத்தோடு, எமது செலான் வங்கிக் கிளையில் காசோலையை வைத்திருக்க எவரும் எந்தச் செலான் வங்கிக் கிளையினூடாகவும் உடனே பணத்தை பெறும் வாய்ப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக யாழ்ப்பாண செலான் வங்கிக்குரிய காசோலையை கொழும்பிலோ அல்லது வேறு எந்தப் பிரதேசத்திலுள்ள செலான் வங்கிக் கிளையில் கொடுத்து, உடன் பணத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும். காசோலைக்குரியவர் இல்லாமல் வேறொருவர் பணத்தை பெறுவதாயின், எமது வங்கிக்கிளையில் வைப்புச் செய்தால் அன்று மாலை 4 மணிக்கு அவருடைய கணக்கில் வரவு வைக்கப்படும் இப்படியான துரித சேவைகளை நாங்கள் செய்து வருகின்றோம்.

மேலும், வெளிநாட்டில் இருப்பவர்கள் இலங்கையிலுள்ள தமது உறவுகளுக்கு துரித கதியில் பணம் அனுப்புவதற்கு 'வெஸ்டன் யூனியன்' எனும் பணப் பரிமாற்ற சேவையை எமது வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது. இதனூடாக பணம் அனுப்பும்பொழுது, சில நிமிடங்களில் எமது வங்கியில் பணத்தை பெறக்கூடிய வாய்ப்பு காணக்கூடியதாகவுள்ளது.

மேலும் அடகுக் கடன், விவசாயக்கடன், மீன்பிடிக்கடன், வியாபார அபிவிருத்திக்கடன், சிறுகைத்தொழில்கடன், லீசிங் முறை போன்றவற்றையும் வழங்குகின்றோம். லீசிங் முறைக்கு யாழ்ப்பாணக் கிளைக்கு கடந்த வருடம் பரிசும் கிடைத்துள்ளது. இந்த வகையில் வாடிக்கையாளரிடம் நல்ல ஒத்துழைப்பும் வரவேற்பும் கிடைத்துள்ளது.

**கேள்வி :** கடன்களை வழங்குவதாக கூறியுள்ளீர்கள் ஒருவர் விவசாய அல்லது மீன்பிடி போன்ற கடனை பெறுவதற்கு எவ்வாறான பிணைகள் மற்றும் வழிமுறைகள் என்பவற்றைப் பற்றிக் கூறமுடியுமா?

**பதில் :** ஒருவர் விவசாயக் கடனைப் பெறவிரும்பின் அவர் விவசாயியாக இருக்கவேண்டும். கமநலசேவையின் சிபார்சுடன் இரு அங்கத்தவர்கள் பிணைப் பொறுப்பை ஏற்க வேண்டும். பின்பு எமது உத்தியோகத்தர்கள் பரிசீலிப்பார்கள். தகுதியானவர்களுக்கு கமநலசேவை மன்றத்தின் சிபார்சுடன் கமநலசேவைக் குழுவின் அங்கத்தவர் இருவரின் பொறுப்பு கையொப்பத்துடன் நாம் கடன் வழங்குவோம் இதைப் போன்ற நடைமுறையில்தான், மீன்பிடி அபிவிருத்தி கடன்களும் கொடுக்கின்றோம்.

**கேள்வி:** விவசாயம் மற்றும் மீன்பிடி அபிவிருத்திக்கடன் சம்பந்தமாக மக்கள் மத்தியில் எவ்வாறான வரவேற்புக் காணப்படுகின்றது.

**பதில்:** நாம் யாழ்ப்பாணத்தில் வங்கிக்கிளை ஆரம்பித்து 2 வருடங்கள்தான் ஆகின்றது. நாம் வருவதற்கு முன்பு வேறு வங்கிகளிடம் இவ்வகையான கடன்களை பெற்றுள்ளார்கள். அவ்வாறு பெற்றவர்கள் எம்மிடம் வரவில்லை. புதிதாக கடன் பெறுபவர்கள் எம்மிடம் வந்து பெற்றிருக்கின்றார்கள். மேலும், நாங்கள் புதிதாக வருபவர்களுக்கு கடன் வழங்கத் தயாராக இருக்கின்றோம்.

ஆனால், வருகை குறைவாக இருக்கின்றது. காரணம் விவசாய நிலங்கள் உயர்பாதுகாப்பு வலயத்தில் இருப்பதனால், அங்குசென்று மக்கள் குடியேறி தமது விவசாயத்தை மேற்கொள்ளமுடியாத வகையில் இருக்கின்றார்கள். சம்பந்தப்பட்டவர்கள் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பட்சத்தில் - அந்த மக்கள் விவசாய நடவடிக்கைகளுக்கு எமது வங்கியினூடாக கடன்களை கொடுக்கத் தயாராக இருக்கின்றோம்.

**கேள்வி :** கைத்தொழில் அபிவிருத்திக் கடன் எதுவும் கொடுக்கின்றீர்களா?

கைத்தொழில் அபிவிருத்தி என்று சொல்லும் சிறிய கைத்தொழில்களுக்கான கடன்களைக் கொடுத்து வருகின்றோம். இயந்திரங்கள் மற்றும் வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு லீசிங் முறைப்படி கடன்களை கொடுத்து வருகின்றோம். பெரிய அளவில் கடன்களை பெறுவதற்கு மக்கள் வருவதில்லை. அதற்கான காரணம் தற்போதைய அரசியல் சூழ்நிலை. சம்பந்தப்பட்டவர்கள் நிரந்தர தீர்வை காணும் பட்சத்தில் இவ்வாறான பெரிய அளவிலான கடன்களை வழங்கும் சூழ்நிலை உருவாகும்.

**நேர்காணல் - மயில்வாகனம்**

# பணவீக்கம்

பணவீக்கம் என்பது பொருளாதார இயல்துறையில் பரவலாக இருந்த வேறுபாடுகளுக்கும், கலந்துரையாடலுக்கும் உட்பட்ட ஒரு பதமாகும். பண வீக்கத்துக்கு வரை வலக்கணம் சொல்வதிலும், அதற்கான காரணங்களை விவரிப்பதிலும் பல்வேறு பொருளியல் அறிஞர்களும் பல்வேறு வித்தியாசமான கருத்துக்களை முன்வைத்திருக்கிறார்கள். பணவீக்கம் என்பது நீண்டகாலரீதியில் பொருட்கள் மற்றும் சேவைகளின் பொது விலைமட்டம் உயர்ந்து செல்லும் ஒரு நிலை என்பதனை பெரும்பாலான பொருளியல் வல்லுநர்கள் பொதுவாக ஏற்றுக்கொண்டுள்ளனர். எந்தப் பொருளாதாரத்திலும் குறுங்கால விலை நிராகரிப்புக்கள் பரவலாக காணப்படுவதனாலேயே, நீண்டகாலரீதியில் தொடர்ச்சியாக உயர்ந்துகொண்டு செல்லும் விலைமட்டம மீது இங்கு கவனம் செலுத்தப்படுகிறது.

உதாரணமாக, காலநிலை மாற்றங்களாலோ அல்லது நெருக்கடி நிலைமைகளின் விளைவாகவோ சடுதியாக விலைகள் உயர்ந்து செல்லமுடியும்.

பணவக்கத்திற்கான காரணங்களை விளக்குவதற்கும் அதன் மூலம் அதற்கு வரைவிலக்கணம் வழங்குவதற்கும் பொருளியல் அறிஞர்கள் இதுவரையில் மேற்கொண்டிருக்கும் முயற்சிகளை பிரதானமான மூன்று கருதுகோள்களின் அடிப்படையில் எடுத்துக்காட்ட முடியும் அவையாவன -

1. பண அளவிலான கருதுகோள்
2. கேள்வித்தூண்டல் பணவீக்கம் மற்றும் செலவுத் தூண்டல் பணவீக்கம் என்பன குறித்த கருதுகோள்கள்.
3. அமைப்புவாத கருதுகோள்கள்.

பொருளாதாரமொன்றில் பணநிரமபலுக்கும் பொதுவிலை மட்டத்திற்கும் இடையில் நெருக்கமான தொடர்பு நிலவிவருகின்றது. என்பதனையே பண அளவிலான கருதுகோள் எடுத்துக் காட்டுகிறது.

பணவீக்கத்துக்கு வழிகோலும் காரணங்களை அடிப்படையாகக் கொண்டே கேள்வித்தூண்டல், பணவீக்கம், செலவுத் தூண்டல் பணவீக்கம் என்பன குறித்த கருதுகோள்களை தோற்றியுள்ளன. இறுதி உற்பத்திக்கான மொத்தக் கேள்வியில் அதிகரிப்பு ஏற்படும்போதே, இதன்படி கேள்வித் தூண்டல் பணவீக்கம் தோன்றுகிறது. மொத்தக் கேள்வியில் ஏற்படும் அதிகரிப்பு, உற்பத்திக் காரணிகளின் கேள்வியதிகரிப்புக்கு வழிகோலுவதுடன் - உற்பத்திக் காரணிகளின் விலையுயர்வும் அதனையொட்டி இறுதி உற்பத்தியின் விலையுயர்வும் ஏற்படுவதற்கு வாய்ப்பேற்படுகிறது. இதன்படி, இறுதிப் பொருட்களுக்கு அபரிதமான கேள்வியின் விளைவாகவே பணவீக்கம் தோன்றுகிறது. சம்பளங்கள் அதிகரிப்பதற்கும் விலைமட்டம் உயர்ந்து செல்வதற்குமிடையில் நேரடியான தொடர்பு காணப்படுவதனையே செலவுத்தூண்டல் பணவீக்கத்தின் கருதுகோள் எடுத்து விளக்குகிறது.

இதன் பிரகாரம், கூடிய கேள்வி காணப்படாத சந்தர்ப்பங்களிலும்கூட தொழிற்சங்கங்களின் நெருக்குதல்களால் சம்பளங்கள் உயர்ந்து செல்வதன் விளைவாக பொருட்களினதும் சேவைகளினதும் உற்பத்திச்செலவு உயர்ந்துசென்று அதற்கூடாக பணவீக்கம் தோன்றுகிறது.

பணவீக்கம் மீண்டும் மீண்டும் சம்பள அதிகரிப்புக்கள் ஏறபடுவதற்கு காரணமாக அமைவதானால் இச்செயற்பாடு 'சம்பள விலைச் சுழலாக' தொடர்ந்தும் நிகழ்ந்து வருகிறது என்பது இக்கோட்பாட்டாளர்களின் கருத்தாகும். கேள்வித் தூண்டல் பணவீக்கம் குறித்த கருதுகோளை பேணும் பொருளியலறிஞர்கள், நாணய, நிதிசார் உத்திகளுக்கூடாக மொத்தக் கேள்வியை (முதலீடுகள்+நுகர்வு) குறைப்பதே இதற்கான பரிகாரம் எனக்கூறுகின்றனர். செலவுத் தூண்டப் பணவீக்கத்தின் கருதுகோளை ஆதரிக்கும் பொருளியல் அறிஞர்களின் கருத்துப்படி- சம்பளக் கொள்கைமூலம் தொழிற்சங்கங்களை கட்டுப்படுத்துவதே பணவீக்கத்தை தடுப்பதற்கான அடிப்படை நடவடிக்கையாகும்.

பணவீக்கம் குறைந்த அமைப்புவாத கருதுகோள்கள் பெரும்பாலும் நடப்பு நிலைமைகளை கவனத்தில் எடுத்ததன் மூலம் தோன்றியவையாகும். குறிப்பாக, லத்தீன் அமெரிக்க நாடுகளை உள்ளிட்ட குறைவிருத்தி நாடுகளில் காணப்பட்ட நீண்டகால் பணவீக்க நிலைமைகள் - இப்புதிய கருதுகோள்கள் தோன்றுவதற்கு காரணமாக அமைந்தன. அமைப்புவாத பொருளியல் அறிஞர்கள் பணவீக்கம் குறித்த முன்னைய கருதுகோள்களை நிராகரிக்கின்றார்கள். பொருளாதார முறைகளில் காணப்படும் அமைப்பு ரீதியான பலவீனங்களின் நேரடி விளைவாகவே பண வீக்கத்தை இவர்கள் காண்கிறார்கள். இதன் படி பணவீக்கத்துக்கு வழிகோலும் அமைப்பு ரீதியான காரணிகள் தேசிய, சர்வதேச ( 07 ஆம் பக்கம் பார்க்க)

# தொழில் வங்கி



| நிறுவனம் | வெற்றிடமாகவுள்ள பதவிகள் | அடிப்படைத் தகுதி | இறுதித் திகதி |
|---|---|---|---|
| வர்த்தக வங்கி தலைமைக்காரியாலயம் இல.21, பிரிஸ்டல் வீதி, கொழும்பு - 01 | வலைப்பின்னல் மற்றும் தகவற் தொடர்பாடல் முகாமையாளர் | மின்னியல் அல்லது தொலைத் தொடர்புத் துறையில் விஞ்ஞானமானிப் பட்டம், குறிப்பிட்ட துறைசார் அனுபவம். | 15.04.2004 |
| றைனோ கூரைப்பொருட்கள் உற்பத்தி நிறுவனம் இல. 30, மினிவாங்கொட வீதி, எக்கல, யாஎல. | மனிதவள முகாமையாளர் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டதாரி அல்லது அதற்கு சமமான தகைமை, குறிப்பிட்ட துறைசார் 10 வருட அனுபவம். | 07.04.2004 |
| பிரிட்டிஸ் கவுன்ஸில் த.பெ.இல. 753, கொழும்பு. | கல்வி சேவைகள் உத்தியோகத்தர். | G.C.E. O/L, ஆங்கிலத்தில் விசேட சித்தி, G.C.E. A/L, ஆங்கிலம் மேலதிக தகைமை | 07.04.2004 |
| ஹற்றன் நஷனல் வங்கி 11 ஆவது மாடி, ஹற்றன் நஷனல் வங்கி கோபுரம், 479 ஜெயா மாவததை, கொழும்பு - 10 | உதவிக் கணக்காளர் | CIMA அல்லது ACCA சித்தி. குறைந்தது 3 வருட அனுபவம் வயது 25 - 28 | 14.04.2004 |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப் பெறவிரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

# நீர் வளங்கள் போதியளவு இருந்தும் வினைத்திறனான பயன்பாடு எட்டவில்லை

(சென்றவாரத் தொடர்ச்சி)

எனவே நீரில் வளர்ப்பு தொடர்பான நடவடிக்கைகளையும் அவை தொடர்பாக உருவாக்கப்படவேண்டிய உட்கட்டுமாணங்களையும் சற்று விரிவாக நோக்குவோம்.

நீரில் வளர்ப்பில் மீன், இறால், நண்டு, சிங்கஇறால், கணவாய், சிப்பி, முத்துச்சிப்பி கடலாமை போன்ற விலங்குகளையும் "டக் வீட்" (சிறிய தட்டையான பச்சைநிற இலையையும், சிறுவேர் தொகுதியையும்கொண்ட லெமினேசிய குடும்பத்தைச் சேர்ந்த தாவரங்களாகும் Duckweed) போன்ற தாவரங்களையும் வளர்க்கக் கூடியதாகவுள்ளது. இருப்பினும் இன்று உலகெங்கிலும் மீன்வளர்ப்பும் இறால் வளர்ப்புமே முன்னணியில் உள்ளது.

1. இறால் வளர்ப்பு கைத்தொழில்

இந்தக் கைத்தொழில் மூன்று பிரதான கட்டங்களுக்கூடாக நடைபெறுகின்றது.

1. இறால் குடம்பிகளை உற்பத்தி செய்தல்
2. இறால் பண்ணைத்தொழில்
3. பதப்படுத்தலும் - சந்தைப்படுத்தலும்.

**இறால் குடம்பிகளை உற்பத்தி செய்தல்**

இறால் குடம்பிகளை உற்பத்தி செய்தலானது ஒரு உயிரியல் சார்ந்த பல தொழில் நுட்பங்களைக்கொண்ட நீர் உயிரியலாளர்களால் மேற்கொள்ளப்படும் செயல்முறையாகும். குடம்பி உற்பத்தியில் முதிர்ச்சி அடைந்த ஆண், பெண், இறால்கள் கடலிலிருந்து குஞ்சு உற்பத்தி நிலையங்களுக்கு (பொரிப்பகங்களுக்கு) கொண்டுவரப்பட்டு பராமரிக்கப்படும். இவ்வாறு கொண்டுவரப்படும் பெண் இறாலின் கூட்டுக்கண்களில் ஒன்று அகற்றப்படும். கூட்டுக்கண்கள் அகற்றப்பட்டவை, தோல்களற்றவை மேற்கொள்ளும் இந்தக் காலப்பகுதியில் இவை இனக்கலப்பிற்கு உட்பட்டு சூல்கொள்ளும். சூல்கொண்டவை சராசரியாக 300000 வரையான முட்டைகளை இடும் இந்த முட்டைகளிலிருந்து இறால் குடம்பிகள் பின்வரும் உபநிலைகளிற்கு ஊடாக நிறைவுடலிகளாக விருத்தியடையும்.

முட்டை — நோமிளியஸ் — புரோட்டோசோரியா — மைசிஸ் — பிந்தியகுடம்பி

இவற்றின் விருத்திக் காலங்களில் புரட்டோசோபியா நிலையிலிருந்து உணவூட்டல் நடைபெறும். இவற்றின் உணவாக தயற்றங்கள், பச்சை அல்கா, ஆட்டிமியா போன்ற உயிர் உணவுகளுடன் செயற்கை உணவுகளும் வழங்கப்படும். உயிர் உணவுகள் குஞ்சு உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும். குஞ்சு உற்பத்திக்காகப் பாவிக்கப்படும் உவர்நீர் 30 PPT — 35 P.P.T (P.P.T. - 1/1000 பங்கு) அளவுகளில் உப்புத்தன்மையுடையதாகவும் பல்வேறு வடிகட்டிகளால் சுத்திகரிக்கப்பட்டதாகவும் இருக்கும்.

பிந்திய குடம்பியானது இறால் அமைப்பொத்ததாகவும், பருமனில் சிறியதாகவும் இருக்கும். பிந்திய குடம்பி உருவாகிய நாளிலிருந்து 18 - 25 நாட்களுக்கு இடையில் இளவு தடாகங்களில் வைப்புச் செய்வதற்கு இடையில் 40 - 50 நாட்கள் எடுக்கும். இந்தக் காலப்பகுதியில் இளவுகளுக்கு ஏற்படும் நோய்களை இனங்கண்டு அவைகளுக்கு சிகிச்சையளித்தல் வேண்டும்.

**இறால் பண்ணைத் தொழில்**

இறால் பண்ணைத் தொழில் குஞ்சு உற்பத்தி நிலையங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட இறால் குடம்பிகளைத் தடாகங்களில் இட்டுவளர்த்து அறுவடை செய்தலை மையமாகக்கொண்டது. இறால் வளர்ப்புக்காக அமைக்கப்பட்ட தடாகங்களில் நீர்ச்சூழல் இறால்களின் வளர்ச்சிக்கு ஏற்றதாகவும், இறால் தவிர்ந்த ஏனைய விலங்குகளான மீன், நத்தை, நண்டு அற்றவையாகவும் பேணப்படல் வேண்டும்.

ஒரு ஹெக்ரேயர் விஸ்தீரணமுள்ள தடாகங்களுக்கு 100000 வரையிலான இறால் குடம்பிகள் வைப்பில் இடப்பட்டு 90 - 120 நாட்களில் அறுவடையை மேற்கொள்ளலாம். வைப்பிலிடப்பட்ட இறால்களுக்கு செறிதீவன உணவுகள் ஒழுங்கான கால இடைவெளிகளில் வழங்கப்படும். இந்தக் காலப்பகுதியில் இறால்களுக்கு ஏற்படும் நோய்களை இனங்கண்டு அவற்றிற்குச் சிகிச்சை அளித்தல் வேண்டும். இறால்கள் உரிய பருமன் அடைந்ததும் அறுவடை செய்யப்படும். இவ்வாறு அறுவடை செய்யப்பட்ட உணவு குளிரூட்டப்பட்ட நீரினுள் அமிழ்த்தி உடனடியாகக் கொல்லப்படும். குளிரூட்டப்பட்ட நிலையில் பதப்படுத்தலுக்காக தொழிற்சாலைகளுக்குக் கொண்டு வரப்படும்.

**பதப்படுத்தலும் சந்தைப் படுத்தலும்**

தொழிற்சாலைகளை அடைந்த இறால்களின் தலை அகற்றப்பட்டபின், அவை தரம் பிரித்தலுக்கு உட்படுத்தப்படும். தரம்பிரிக்கப்பட்ட உணவு சுகாதார முறையில் பனிக்கட்டியினுள் அகப்படுத்தப்பட்டநிலையில் பொதியாக்கப்படும். இவ்வாறு பொதியாக்கப்பட்டவை குளிரூட்டப்பட்ட கொள்கலன்களில் அடைக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இதன் மூலம் கவர்ச்சிகரமான இலாபம் பெறப்படுகின்றது.

2) **மீன் வளர்ப்புக் கைத்தொழில்**

இந்தக் கைத்தொழிலானது மூன்று பிரதான கட்டங்களுக்கூடாக நடைபெறுகின்றது.

1) மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்தல் அல்லது சேகரித்தல்
2) மீன் பண்ணைத்தொழில்
3) பதப்படுத்தலும், சந்தைப்படுத்தலும்

**மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்தல் அல்லது சேகரீத்தல்**

மீன் குஞ்சுகளை செயற்கை முறையில் உற்பத்தி செய்யும்போது, முதிர்ச்சியடைந்த பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த ஆண், பெண் மீன்கள் கடலில் இருந்தோ அல்லது நன்னீர் நிலைகளில் இருந்தோ கொண்டுவரப்படும்.

இவ்வாறு கொண்டுவரப்பட்டவற்றிற்கு ஓமோன் சிகிச்சை அளிக்கப்படும். இதன்போது, உற்பத்தியாக்கப்படும் குஞ்சுகளுக்கு செயற்கை உணவூட்டி வளர்க்கப்பட்டு, அவை உரிய பருவம் அடைந்ததும் தடாகங்களில் இட்டு வளர்க்கப்படும்.

இது தவிர இயற்கையாக கடலிலிருந்து மீன் குஞ்சுகள் சேகரிக்கப்பட்டு தடாகங்களில் வைப்பிடப்படலாம். சில மீன் இனங்களின் குஞ்சுகள் குறிப்பிட்ட காலங்களில் பெருமளவில் கிடைக்கக்கூடியதாகவும் இருக்கும். (மன்னார், கற்பிட்டிப் பிரதேசங்களில் - ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களில் பாலை மீன் குஞ்சுகள் பெருமளவில் கிடைக்கின்றன. **(Chanos, Chanos)** இவ்வாறு குஞ்சுகள் பெறப்படும்போது, உற்பத்திச் செலவுகள் குறைவாகவும், இதனால் கூடிய இலாபம் பெறக்கூடியதாகவும் இருக்கும்.



மீன் வளர்ப்புக் கைத்தொழில் உவர் நீர் நன்னீர் மீன்களில் மேற்கொள்ளப்படலாம். நன்னீர்க்குரிய மீன்களாக நிலாப்பியா (ஜப்பான் மீன்) கொண்டை மீன், கார்ப்பின மீன், விலாங்கு என்பனவும் உவர் நீர் மீன்களாக பாலை, மணலை போன்றனவும் இக் கைத்தொழில் துறையில் பாவிக்கப்படுகின்றன

**மீன் பண்ணைத் தொழில்**

மீன் பண்ணைத் தொழிலில் மீன் குஞ்சுகள் செயற்கையாக அமைக்கப்பட்ட தடாகங்களிலோ அல்லது தெரிவுசெய்யப்பட்ட நன்னீர் நிலையிலோ இங்கு வளர்க்கப்படும். இக்காலப் பகுதியில் மீன் குஞ்சுகள் வைப்பிடப்படும் இடங்களைப் பொறுத்து செயற்கையான உணவுகளோ அல்லது இயற்கையான உணவுகளோ அல்லது இரண்டும் வழங்கப்படும். இவ்வாறு இடப்பட்டதிலிருந்து 3 - 31/2 மாதங்களின் பின தொடங்கலாம்.

ஒரு தடவையிலோ அல்லது குறித்த கால இடைவெளிகளில் குறித்த பருமன் அடைந்தவற்றை மாத்திரம் அதற்குரிய பொருத்தமான வலையைப் பாவித்து மேற்கொள்ளப்படும்.

வளர்ப்புக் காலத்தின்போது, மீன்களுக்கு வீட்டுக்கழிவுகள் பண்ணை விலங்களின் (மாடு, ஆடு, பன்றி) கழிவுகள் மீன் பதப்படுத்தலின்போது, கிடைக்கும் கழிவுகள் என்பன வழங்கப்படும். வளர்ப்புக்களின் போது மீன்களுக்கு ஏற்படும் நோய்களை அவதானித்து அவற்றுக்கு சிகிச்சை அளிக்கவேண்டும். (தொடரும்)

---

# பணவீக்கம்

6 ஆம் பக்கத் தொடர்ச்சி

என இரு பிரிவுகளில் வேறுபடுத்திக்காட்டப்படுகின்றன. தேசியமட்டத்திலான காரணிகள மிக முக்கியமானதாகும். குறைவிருத்தி நாடுகளில் இறக்குமதிப் பொருட்களின் விலைகள் மீது எந்தச் செல்வாக்கையும் பிரயோகிக்க முடிவதில்லை. இதன் விளைவாக இந்த நாடுகளின் வெளிநாட்டு வர்த்தக விகிதம் தொடர்ச்சியாக சீர்குலைந்துகொண்டுவரும் அபாயம் காணப்படுகிறது. அதாவது, இறக்குமதிப் பொருட்களின் விலைகள் தொடர்ந்து அதிகரித்துச் கொண்டுபோகும் அதேவேளையில், ஏற்றுமதிப் பொருட்களுக்கான விலைகளில் படிப்படியான வீழ்ச்சிப் போக்கொன்று தெரிகிறது. இந்நிலைமைகள் செலாவணி நெருக்கடிகளைத் தோற்றுவிப்பதால் செலாவணி இறக்குமதிக் கட்டுப்பாட்டுக்கொள்கைகளை செயற்படுத்த வேண்டிய தேவை எழுகிறது. இது இறக்குமதிப் பிரதியீட்டுப் பொருட்களின் விலைமட்டம் உயர்வதற்கு வழிகோலுகிறது. ஆகவே, அமைப்பியல்வாதக் கருதுகோளின்படி, மூன்றாவது மண்டல நாடுகளில் பணவீக்கம் வெறுமனே உள்நாட்டுக் காரணிகளால் மட்டும் தோன்றுவதல்ல. மாறாக, சர்வதேச பொருளாதார அமைப்பில் காணப்படும் சமமின்மைகளின் விளைவாகவே அது தோன்றுகிறது.

3. இலங்கை மூன்றாவது மண்டலத்தைச் சேர்ந்த ஒரு நாடாக இருப்பதுடன், அது எதிர்நோக்கியிருக்கும் பொருளாதார பிரச்சினைகளில் பணவீக்கம் மிக முக்கிய இடத்தைப் பெறுகிறது. இலங்கையின் பொது விலைமட்டத்தில் ஏற்படும் மாற்றங்களின் போக்கினையும், அளவினையும் கணிப்பதற்கு உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும் மூன்று சுட்டெண்களை பயன்படுத்தமுடியும், அவையாவன - கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண, மொத்தவிலைச் சுட்டெண், எடுகோள் விலைச்சுட்டெண் என்பன இவைதவிர வெளியிடப்படாத இரு விலைச்சுட்டெண்கள் உண்டு. அவையாவன - விசேட நுகர்வோர் விலைச் சுட்டெண், மத்திய வங்கியின் வாழ்க்கைச் செலவுச்சுட்டெண் என்பவையாகும். கீழேயுள்ள அட்டவணை கடந்த சில வருடங்களில் விலைச்சுட்டெண்களின் போக்கினை எடுத்துக்காட்டுகிறது. கடந்த தசாப்தங்களில் இலங்கையில் பணவீக்கம் துரிதமாக உயர்ந்து சென்றுள்ளது. என்பதனை இச் சுட்டெண்கள் காட்டுகின்றன. நீண்டகால ரீதியில் வீக்கப்போக்கு உயர்ந்துசெல்லும் ஒரு நிலையே இங்கு தென்படுகின்றது. முன்னர் குறிப்பிட்ட கருதுகோள்கள் அனைத்தினதும் கூட்டான ஒரு விளைவினாலேயே இலங்கையில் துரித வேகத்தில் பண வீக்கம் நிகழ்ந்து வந்திருக்கிறது. இதில் ஒவ்வொரு கருதுகோள் காரணியின் பங்களிப்பையும் தனித்தனியாக எடுத்துக்காட்டுவது கடினமாகும். எனினும், இதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளை தேசிய, சர்வதேசிய காரணிகளாக இரு பிரிவுகளாக பிரிக்கமுடியும். வீக்க மூலங்களிலிருந்து வரவு செலவுப் பற்றாக்குறை நிதிப்படுத்தப்பட்டமை, பாரிய அளவில் மூலதன முதலீடுகள் இடப்பட்டமை, தனியார் துறைக்கு பெருமளவில் கடன்கள்வந்து சேர்ந்ததனால் பண நிரம்பலில் ஏற்பட்ட அதிகரிப்பு, உள்நாட்டு விலைக் கட்டுப்பாட்டு சட்ட விதிகள் எளிதாக்கப்பட்டமை, உள்நாட்டு அரசியல் நெருக்கடி மற்றும் பாதகமான காலநிலை போன்றவற்றை உள்நாட்டுக் காரணிகளாக கூறமுடியும். சர்வதேசிய காரணிகள் - இலங்கை ரூபாவின் வெளிப்பெறுமதி கடுமையான வீழ்ச்சி கண்டமை, அடிப்படை நுகர் பொருட்கள் மற்றும் நடுத்தர முதலீட்டுப் பொருட்களின் சர்வதேச விலைகள் உயர்ந்து சென்றமை, உலகின் வேறு நாடுகள் மேற்கொண்ட சில எதிர் நடவடிக்கைகள் போன்றன. சில உள்நாட்டுக் காரணிகளை நாணய நிதிக் கொள்கைகள் மூலம் ஓரளவுக்கு கட்டுப்படுத்த முடியுமாயின், சர்வதேச பொருளாதார சூழலின் விரும்பத்தகாத செல்வாக்குகளினால் நேரிடும் தாக்கங்களை கட்டுப்படுத்து வது மிகக் கடினமான காரியமாகும். குறிப்பாக, தேசிய சர்வதேசிய என்ற உரு பிரிவுகளிலும் அடங்கும் அமைப்பு ரீதியான பலவீனங்களை குறுங்கால தீர்வுகள் மூலம் வெற்றிகொள்வது எளிதான காரியமல்ல.

---

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | நெல்லியடி | சங்கானை | சாவகச்சேரி | பருத்தித்துறை |
|---|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | - | 20/= | 25/= | 20/= | 15/= | 15/= | 10/= | 10/= |
| வெண்டிக்காய் | 15/= | 10/= | 10/= | 10/= | 15/= | 12/= | 30/= | 15/= |
| உருளைக்கிழங்கு | 45/= | 60/= | 65/= | 55/= | 60/= | 60/= | 60/ | 60/= |
| கத்தரிக்காய் | 20/= | 20/= | 20/= | 15/= | 20/= | 10/= | 10/= | 15/= |
| பாகற்காய் | 20/= | 25/= | 25/= | 15/= | 20/= | 25/= | 40/= | 25/= |
| கரட் | 30/= | 25/= | 30/= | 22/= | 30/= | 20/= | 40/= | 32/= |
| பீற்றூட் | 15/= | 15/= | 10/= | 10/= | 12/= | 10/= | 10/= | 12/= |
| முருங்கக்காய் | 120/= | 90/= | 80/= | 60/= | 120/= | 70/= | 160/= | 50/= |
| வெங்காயம் | 30/= | 28/= | 35/= | 30/= | 30/= | 30/= | 35/= | 20/= |
| பச்சை மிளகாய் | 25/= | 25/= | 25/= | 30/= | 30/= | 30/= | 25/= | 35/= |

# பாராளுமன்றத் தேர்தல் – 2004.04.02

# இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்கான பிரயாண ஒழுங்குகள்

யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்து வாழ்கின்ற வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு வசதியாக பிரயாண ஒழுங்குகள் என்னால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்போக்குவரத்து சேவையில் வாக்காளர்கள் மட்டும் பயணம் செய்யமுடியும் என்பதுடன் இச்சேவை முற்றிலும் இலவசமானதாகும். எனவே இடம்பெயர்ந்துள்ள வாக்காளர்கள் தமது வாக்களிப்பு நிலையம் அமைந்துள்ள இடங்களுக்குச் சென்று வாக்களிப்பதற்கான பிரயாண ஒழுங்கு விபரம் கீழ்வருமாறு -

## - வாக்கெடுப்புப் பிரிவு : சாவகச்சேரி

1. சுன்னாகம் - உரும்பிராய் - கோப்பாய் - கைதடி - நாவற்குழி - கோயிலாக்கண்டி - மீண்டும் அதே பாதையில் சுன்னாகம்.
புறப்படும் நேரம் - 06.30 09.00 11.30 02.45
திரும்பும் நேரம் - 07.45 10.15 12. 45 04.15

2. அச்சுவேலி - புத்தூர் - சிறுப்பிட்டி - கோப்பாய் - கைதடி - நாவற்குழி - கோயிலாக்கண்டி மீண்டும் அதே பாதையில் அச்சுவேலி.
புறப்படும் நேரம் - 7.00 9.30 12.00 3.15
திரும்பும் நேரம் - 8.15 10.45 1.15 4.3C

3. பருத்தித்துறை - நெல்லியடி - கொடிகாமம் - மிருசுவில் - உசன் மீண்டும் அதேபாதையில் பருத்தித்துறை.
புறப்படும் நேரம் - 7.45 10.45 1.45
திரும்பும் நேரம் - 9.15 12.15 4.30

## வாக்கெடுப்புப்பிரிவு : யாழ்ப்பாணம்

1) பாசையூர் அந்தோனியார் தேவாலயம் - யா/துரையப்பா மகா வித்தியாலயம் மீண்டும் அதே பாதையில் பாசையூர் அந்தோனியார் தேவாலயம்
புறப்படும் நேரம் - 7.15 8.30 9.30 10.30 11.45 1.40
திரும்பும் நேரம் - 7.45 9.00 10.00 11.00 12.30 2.00

## வாக்கெடுப்புப்பிரிவு : வட்டுக்கோட்டை

1) யாழ்ப்பாணம் - காரைநகர் - மீண்டும் அதே பாதையில் யாழ்ப்பாணம் (பாதைஇல: 782)
புறப்படும் நேரம் - 6.00 8.40 12.20 2.00
திரும்பும் நேரம் - 7.20 10.00 12.40 4.00

2) யாழ்ப்பாணம் - காரைநகர் - மீண்டும் அதே பாதையில் யாழ்ப்பாணம் (பாதைஇல: 786)
புறப்படும் நேரம் - 7.00 10.00 1.00
திரும்பும் நேரம் - 8.30 11.30

## வாக்கெடுப்புப் பிரிவு : ஊர்காவற்துறை

1) யாழ்ப்பாணம் - மண்டைதீவு - மீண்டும் அதே பாதையில் யாழ்ப்பாணம்.
புறப்படும் நேரம் - 7.00 9.00 11.00 1.15
திரும்பும் நேரம் - 8.00 10.00 12.00 2.00

2) யாழ்ப்பாணம் - வேலணை - புங்குடுதீவு - மீண்டும் அதேபாதையில் யாழ்ப்பாணம்.
புறப்படும் நேரம் - 7.15 9.45
திரும்பும் நேரம் - 8.30 11.30

3) யாழ்ப்பாணம் - வேலணை - ஊர்காவற்றுறை - மீண்டும் அதே பாதையில் யாழ்ப்பாணம்.
புறப்படும் நேரம் - 6.45 10.00 2.15
திரும்பும் நேரம் - 8.30 11.45 4.00

## வாக்கெடுப்பு பிரிவு : பருத்தித்துறை

1) பருத்தித்துறை - கற்கோவளம் - குடத்தனை - அம்பன் மீண்டும் அதேபாதையில் பருத்தித்துறை.
புறப்படும் நேரம் - 6.15 8.15 10.15 1.00 3.00
திரும்பும் நேரம் - 7.15 9.15 11.15 2.00 4.00

2) பருத்தித்துறை - மந்திகை - உபய கதிர்காமம் - குடத்தனை - அம்பன் மீண்டும் அதேபாதையில் பருத்தித்துறை.
புறப்படும் நேரம் - 7.00 9.00 11.00 1.45 3.45
திரும்பும் நேரம் - 8.00 10.00 12.00 2.45 4.45

3) பருத்தித்துறை - கற்கோவளம் - உபய கதிர்காமம் - மந்திகை - கொடிகாமம் - முகமாலை மீண்டும் அதேபாதையில் பருத்தித்துறை.
புறப்படும் நேரம் - 6.15 9.45 2.15
திரும்பும் நேரம் - 8.00 11.30 4.00

3) பருத்தித்துறை - மந்திகை - கலிகைச்சந்தி - கொடிகாமம் - முகமாலை மீண்டும் அதேபாதையில் பருத்தித்துறை.
புறப்படும் நேரம் - 9.00 1.30
திரும்பும் நேரம் - 11.00 3.30

1) மல்லாகம் - பன்னாலை - இளவாலை மீண்டும் அதேபாதையில் மல்லாகம்.
புறப்படும் நேரம் - 6.30 8.00 9.45 11.15 1.30 3.00
திரும்பும் நேரம் - 7.15 8.45 10.30 12.00 2.15 3.45 5.00

2) மல்லாகம் - தெல்லிப்பளை - கட்டுவன்புலம் மீண்டும் அதேபாதையில் மல்லாகம்.
புறப்படும் நேரம் - 6.30 7.30 9.00 10.00 11.00 12.00 2.00
திரும்பும் நேரம் - 7.00 8.00 9.30 10.30 11.30 12.30 2.30

3) சுன்னாகம் - மல்லாகம் - தெல்லிப்பளை மகாஜனா - அளவெட்டி - இளவாலை மீண்டும் அதேபாதையில் சுன்னாகம்.
புறப்படும் நேரம் - 6.15 7.45 9.30 11.00 1.30
திரும்பும் நேரம் - 8.30 10.15 11.45 2.15

4) மல்லாகம் - சுன்னாகம் - புன்னாலைக்கட்டுவன் - குட்டியப்புலம் மீண்டும் அதேபாதையில் மல்லாகம்.
புறப்படும் நேரம் - 7.30 9.15 10.45 1.00 2.30
திரும்பும் நேரம் - 8.15 10.00 11.30 1.45 3.15

5) பருத்தித்துறை - வியாபாரிமூலை - திக்கம் - பொலிகண்டி - உடுப்பிட்டி - அச்சுவேலி - நவக்கிரி - புன்னாலைக்கட்டுவன் சந்தி - சுன்னாகம் - மல்லாகம் மீண்டும் அதேபாதையில் பருத்தித்துறை.
புறப்படும் நேரம் - 6.30 8.15 10.00 12.00 2.15
திரும்பும் நேரம் - 8.15 10.15 11.45 2.30 4.15

6) பருத்தித்துறை - மந்திகை - கலிகைச்சந்தி - நெல்லியடி - அச்சுவேலி - நவக்கிரி - புன்னாலைக்கட்டுவன் சந்தி - சுன்னாகம் - மல்லாகம் மீண்டும் அதேபாதையில் பருத்தித்துறை.
புறப்படும் நேரம் - 6.30 9.45 2.00
திரும்பும் நேரம் - 8.15 11.30 4.00

7) வல்வெட்டித்துறை - தொண்டமனாறு - அச்சுவேலி - நவக்கிரி - புன்னாலைக்கட்டுவன் சந்தி - சுன்னாகம் - மல்லாகம் - மீண்டும் அதே பாதையில் வல்வெட்டித்துறை
புறப்படும் நேரம் - 6.45 7.30 10.15 10.45 2.15 2.30
திரும்பும் நேரம் - 8.30 9.15 12.00 1.00 4.00 4.15

8) நெல்லியடி - வதிரி - நவிண்டில் - உடுப்பிட்டி - அச்சுவேலி - நவக்கிரி - புன்னாலைக்கட்டுவன் சந்தி - சுன்னாகம் - மல்லாகம் - மீண்டும் அதே பாதையில் நெல்லியடி
புறப்படும் நேரம் - 6.35 9.00 12.15 2.45
திரும்பும் நேரம் - 7.45 10.15 1.30 4.00

9) இடைக்காடு - அச்சுவேலி - ஆவரங்கால் - புத்தூர் - நவக்கிரி - புன்னாலைக்கட்டுவன் சந்தி - சுன்னாகம் - மல்லாகம் - மீண்டும் அதே பாதையில் இடைக்காடு.
புறப்படும் நேரம் - 6.15 8.15 10.15 12.15 3.00
திரும்பும் நேரம் - 7.15 9.15 11.15 2.00 4.00

10) யாழ்ப்பாணம் - கொக்குவில் - இணுவில் - உடுவில் - சுன்னாகம் - மல்லாகம் - மீண்டும் அதே பாதையில் யாழ்ப்பாணம்.
புறப்படும் நேரம் - 6.30 8.30 10.15 12.00
திரும்பும் நேரம் - 7.15 9.30 11.15 1.00

11) யாழ்ப்பாணம் - திருநெல்வேலி - கோண்டாவில் - உரும்பிராய் - புன்னாலைக்கட்டுவன் சந்தி - சுன்னாகம் - மல்லாகம் - மீண்டும் அதே பாதையில் யாழ்ப்பாணம்.
புறப்படும் நேரம் - 7.00 9.15 11.30 1.30
திரும்பும் நேரம் - 8.00 10.30 12.30

12) யாழ்ப்பாணம் - நல்லூர் - கல்வியங்காடு - இருபாலை - கோண்டாவில் - உரும்பிராய் - புன்னாலைக்கட்டுவன் சந்தி - சுன்னாகம் - மல்லாகம் - மீண்டும் அதே பாதையில் யாழ்ப்பாணம்.
புறப்படும் நேரம் - 6.30 8.30 10.30 12.30
திரும்பும் நேரம் - 7.30 9.30 11.30 1.30

13) கொடிகாமம் - சாவகச்சேரி - கைதடி - கோப்பாய் - உரும்பிராய் - புன்னாலைக்கட்டுவன் சந்தி - சுன்னாகம் - மல்லாகம் - மீண்டும் அதே பாதையில் கொடிகாமம்.
புறப்படும் நேரம் - 6.30 9.00 11.30 2.00
திரும்பும் நேரம் - 7.45 10.45 12.45 4.00

14) கொடிகாமம் - மீசாலை (புத்தூர் சந்தி) - கனகம்புளியடி - மட்டுவில் - நுணாவில் - கைதடி - கோப்பாய் - உரும்பிராய் - புன்னாலைக்கட்டுவான் சந்தி - சுன்னாகம் - மல்லாகம் - மீண்டும் அதேபாதையில் கொடிகாமம்.
புறப்படும் நேரம் - 7.15 10.15 1.30
திரும்பும் நேரம் - 8.45 12.00

15) கோப்பாய் - இராச வீதி ஊடாக நவற்கிரி - புன்னாலை கட்டுவன் சந்தி - சுன்னாகம் - மல்லாகம் மீண்டும் அதே பாதையில் கோப்பாய்.
புறப்படும் நேரம் - 7.00 9.15 11.30 2.00
திரும்பும் நேரம் - 8.15 10.30 1.00

16.) கோப்பாய் - நீர்வேலி - சிறுப்பிட்டி - புத்தூர் - புன்னாலைக்கட்டுவன் சந்தி - சுன்னாகம் - மல்லாகம் - மீண்டும் அதே பாதையில் கோப்பாய்.
புறப்படும் நேரம் - 7.30 9.45 12.00 2.15
திரும்பும் நேரம் - 8.45 11.00 1.30

17) கோப்பாய் - நீர்வேலி - புன்னாலைக்கட்டுவன் சந்தி - சுன்னாகம் - மல்லாகம் - மீண்டும் அதே பாதையில் கோப்பாய்.
புறப்படும் நேரம் - 7.15 8.45 10.15 12.15 2.00
திரும்பும் நேரம் - 8.00 9.30 11.30 1.15

18) மூளாய் - சுழிபுரம் - பன்னாகம் - சித்தங்கேணி - சங்கானை - தொட்டிலடி - அளவெட்டி - தெல்லிப்பளை மகாஜனா - மல்லாகம் - சுன்னாகம் - மீண்டும் அதே பாதையில் மூளாய்.
புறப்படும் நேரம் - 6.00 9.00 12.00
திரும்பும் நேரம் - 7.30 10.30 1.30

19) வட்டுக்கோட்டை - சங்கரத்தை - மாவடி - சித்தங்கேணி - சங்கானை - தொட்டிலடி - அளவெட்டி - தெல்லிப்பளை மகாஜனா - மல்லாகம் - சுன்னாகம் - மீண்டும் அதே பாதையில் வட்டுக்கோட்டை.
புறப்படும் நேரம் - 6.30 9.30 12.30
திரும்பும் நேரம் - 8.00 11.00 1.45

20) சங்கானை - சங்கானை வைத்தியசாலை வீதி - தொட்டிலடி - மாசியப்பிட்டி - அளவெட்டி - தெல்லிப்பளை மகாஜனா - மல்லாகம் - சுன்னாகம் - மீண்டும் அதே பாதையில் சங்கானை.
புறப்படும் நேரம் - 6.45 9.15 11.45 3.00
திரும்பும் நேரம் - 8.00 10.30 1.45 4.15

21) சங்கானை - சீரணிச் சந்தி - மானிப்பாய் - மருதடி - உடுவில் - மருதனார்மடம் - சுன்னாகம் - மல்லாகம் - தெல்லிப்பளை மகாஜனா - அளவெட்டி - மீண்டும் அதே பாதையில் சங்கானை.
புறப்படும் நேரம் - 6.45 9.15 11.45 3.00
திரும்பும் நேரம் - 8.00 10.30 1.45 4.15

(தொடர்ச்சி 11 ஆம் பக்கம்)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

அறத்தான் வருவதே இன்பம் மற்றுஎல்லாம்
புறத்த புகழும் இல.

திருக்குறள்

# நமது நோக்கு

## இனவிரோத நாசகார சக்திகளை இனம் கண்டு கொள்ளல் அவசியம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கருணா கும்பலின் அடாவடித்தனமான நடவடிக்கை காரணமாக, அங்கு வாழும் மக்களிடையே கடும் பதற்றமும் பீதியும் நிலவும் சூழல் அதிகரித்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பேரினவாத சக்திகளினதும், சில அந்நிய ஆதிக்க சக்திகளினதும் கைக்கூலியாகமாறி ஒட்டுமொத்த தமிழினத்திற்கே துரோகியாகத் தன்னை இனம்காட்டிக் கொண்ட கருணாவை, விடுதலைப்புலிகள் தமது அமைப்பிலிருந்து தூக்கியெறிந்த பின்னர் அவர் தன்னிச்சையாகவும், அற்பத்தனமான சுயநலத்துடனும் தன்னை ஆட்டுவிக்கும் சக்திகளின் தாளத்திற்கேற்ப தனது நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கியதுடன், மட்டக்களப்பு தமிழ் பேசும் மக்களின் இயல்பு வாழ்வுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபடத்தொடங்கியுமுள்ளார்.

இதன் அதிஉச்ச நடவடிக்கையாக நேற்றுமுன்தினம் மாலை மட்டக்களப்பு நகருக்குள் சென்ற கருணா கும்பலைச்சேர்ந்தவர்கள், அங்குள்ள வடபகுதி தமிழ் மக்கள் அனைவரையும் அன்றையதினம் நள்ளிரவுக்குள் மட்டக்களப்பை விட்டு வெளியேறிவிடவேண்டும் என ஒலிபெருக்கிகள் மூலமாக அச்சுறுத்தலை விடுக்கும் அறிவிப்பினை மேற்கொண்டனர் என்றும், அவர்கள் தமது அசையும் அசையாச்சொத்து அனைத்தையும் கைவிட்டு வெறும் 500 ரூபாவை மட்டுமே கொண்டு செல்ல முடியும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

அது மட்டுமல்லாது அப்பிரதேசவாதத்திற்குரிய சிந்தனை கொண்ட கும்பலானது வடபகுதி மக்கள் அங்கிருப்பதானது அந்த மாவட்டத்திற்குச் சாபக்கேடு எனவும் குறிப்பிடும் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளதாகவும் அறியவந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட அச்சம் காரணமாக சில வடபகுதி அப்பாவிப் பொதுமக்கள் அங்கிருந்து வெளியேறவும் தொடங்கியுள்ளதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

நாளைய தினம் தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் உள்ள தமிழ்மக்கள் முன்னெப் போதும் இல்லாத வகையிலே தமிழ்த்தேசிய ஒருமைப் பாட்டின் உறுதிமிக்க வலுவை தமது வாக்களிப்பின் மூலம் உலகிற்கு உணர்த்த முடிவெடுத்து நிற்கும் சூழலில் அதனை எப்படியாவது சிதைத்து தமிழ் மக்களிடையே பிரிவையும், பிளவையும் ஏற்படுத்த நீண்ட காலமாகவே திட்டமிட்டு செயற்படும் தமிழின விரோத சக்திகளின் அபிலாஷைகளை நிறைவேற்றிவைக்கும் பொறுப்பை கருணாவே ஏற்றுள்ளார் என்றே உணரக் கூடியதாக உள்ளது.

உண்மையிலேயே கருணாவுக்கு கிழக்குப் பகுதி மக்கள் மீதும், அவர்களுக்கான அரசியல் விடுதலை மீதும் நம்பிக்கையும், விருப்பமும் கொண் டவராக இருப்பாரேயானால் இம்மாதிரியான சின்னத் தனமாக - கிழக்கு மக்களைத் தனிமைப்படுத்தி, பலவீனப்படுத்தி அவர்களின் இனத்துவத்தை சிதைக் கும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவேமாட்டார்.

மட்டக்களப்பு வேட்பாளராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட ராஜன் சத்தியமூர்த்தி கொலைசெய்யப்பட்டமையை பிரதேசவாதப் போக்கில் பிரசாரம் செய்து, ஆதாயம் தேடமுயலும் கருணாவுக்கு, ராஜன் சத்தியமூர்த்தி வடபகுதியைச் சேர்ந்த ஒருவர் என்பது தெரியாமல் போனது துரதிர்ஷ்டமே.

அவரைச் சுட்டுக்கொன்றவர்கள் கிழக்கில் நிலவும் தமிழ் மக்களிடையேயான இன ஒருமைப்பாட்டுச் சூழலைக் குலைக்க விரும்பிய, அந்தக் குழப்பத்தில் ஆதாயம் தேடமுயன்ற, தமிழின விரோத சக்திகளேயாவர்.

இந்தக் கொலைக்கு விடுதலைப்புலிகள் பலத்த கண்டனத்தைத் தெரிவத்துள்ளமை குறிப்பிடத்தக்க ஒனறான நிலையில் இதனை தனது பிரதேசவாத வெறிக்கு பிரசார சாதனமாகப் பயன்படுத்த நினைக்கும் கருணாவின் உள்நோக்கத்திற்கான பின்னணியில் புரிந்து கொள்வது கடினமேயல்ல.

கிழக்கில் இருந்து வடபகுதி மக்களை வெளியேற்றுவதன் மூலம் கிழக்கின் ஸ்திரத்தன்மையை சிதைக்க முயலும் கருணா இதனை அவரூடாக செய்படுத்த முனையும் சக்திகளுக்கு முற்றாக விலைபோயுள்ளார் என்பதில் சந்தேகமேயில்லை...

மட்டக்களப்பு நகரில் ஒலிபெருக்கி மூலம் வடபகுதி மக்களை வெளியேறுமாறு அறிவுப்புக்களை மேற்கொண்ட கருணா கும்பலை, அப்பகுதியைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ள பொலிஸாரும், இராணுவத்தினரும் எதுவும் செய்யாது பார்த்துக் கொண்டிருந்தார்கள் எனில் கருணாவின் பின்புலம் எதுவென்பதை புரிந்து கொள்ள முடியும்.

இதனைத் தமிழ்மக்கள் நன்கு கருத்தில் கொள்ள வேண்டியது உடனடி அவசியமாகும்.

வடக்கு - கிழக்கில் தமிழினம் ஒன்றுபட்டு தமிழ்த தேசியத்தை வலுப்படுத்தும் காலகட்டத்தில் அதனை சிதைக்க முற்படும் தீய இனவிரோத சக்திகளை இனங் கண்டு நிராகரித்தலும் தமிழ்மக்களின் வரலாற்றுக் கடமையேயாகும்.

## நாடும் நடப்பும்




# நாளை நடைபெறப்போகும் தேர்தல் ஒரு பெரும் போராகவே கருதுகிறோம்

## துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் தங்கன்

(யாழ்ப்பாணம்)

நாம் சந்தித்த பெரும் போர்களில் நாம் இறுதியாகச் சந்திக்கப்போகும் தேர்தல்களமானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்து வீட்டுச்சின்னத்திற்கு புள்ளடியிட்டு வெற்றி பெறச் செய்யும் ஒரு போராகவே இதைக்கருதுகிறோம்.

தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் தங்கன் நேற்றுமுன்தினம் நல்லூரில் நடைபெற்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் இறுதிப்பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய போது இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது -

இன்று நாங்கள் வரலாற்றின் அடையாளங்களை நினைவு படுத்தும் முக்கியமான இடம் ஒன்றில் கூடியிருக்கின்றோம்.

வரலாற்றில் முக்கியம் வாய்ந்த இந்த மண் என்றென்றும் தமிழ் இனத்தின் ஒற்றுமையையும் தமிழ்த் தேசியத்தின் உணர்வையும் உலகிற்குப் பறைசாற்றுகின்ற, பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய மண்ணாகவே இந்தமண் அமைந்துள்ளது.

ஊர்கூடி ஒருமித்து தமிழினத்தின் வரலாற்றை உலக சமுதாயத்திற்கு எடுத்துரைத்த ஒரு பெருமைக்குரிய பிரதேசமாக இந்தப்பிரதேசம் திகழ்கின்றது. இன்றும் அதற்காகவே தேசியத்தின் விடுதலையை விரைவில் வென்றெடுக்கும் நோக்கில் தமிழ் மக்கள் அனைவரும் கூடியிருக்கின்றோம்.

இந்தத் தேர்தலானது இனவாத சக்திகளுக்கு அச்சுறுத்தும் வகையிலே அமைந்துள்ளது. எங்களுடைய தேசம், எங்களுடைய நிலம், எங்களுடைய வீடு எமக்குரியது என்ற கொள்கைகளை ஒருமித்த மனத்தோடு உரத்துக் கூறுவதற்காகவே நாம் இந்த இடத்தில் கூடியிருக்கின்றோம்.

வடக்கு - கிழக்கு தாயகப் பகுதியின் பல்வேறு பிரச்சினைகளை வெளிப்படுத்தும் வகையில் நாம் ஒன்று சேர்ந்து குரல் கொடுத்திருக்கின்றோம். யுத்தத்தின் வரலாற்றினையும் சர்வதேச சமுகத்திற்கும், அரசுக்கும் உணர்த்தியிருக்கிறோம்.

விடுதலைப்புலிகளின் ஒருமித்த செயற்பாட்டின் மூலம் கிடைத்த வெற்றியையும் புலிகளின் பலத்தையும் நாம் பல முறை தெளிவுபடுத்தியுள்ளோம்.

விடுதலைப்புலிகள் இராணுவரீதியாக வெற்றி பெற்ற வேளையில் அரசுசர்வதேச நாடுகளுடன் தொடர்பு கொண்டு சமாதான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். என்று கேட்டுக் கொண்டது அரசின் வேண்டுகோளுக்கு செவிசாய்த்து சர்வதேச நாடுகளின் மத்தியஸ்தம் மூலம் சமாதான பாதையில் விடுதலைப் புலிகள் நகர்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

உண்மையானசமாதானத்தை விரும்புகின்றவர் யார்? சமாதான விரோதிகள் யார்? என்கிற கருத்துக்களை இராஜதந்திரரீதியாக தலைவர் பிரபாகரன் சர்வதேச உலகிற்கு நன்கு வெளிப்படுத்தியுள்ளார்.

பேச்சுவார்த்தைகளின் கதவுகளை மூடியவர்கள் யார்? பேச்சுவார்த்தைகளை விரும்பாதவர்கள் யார்? என்பதை சர்வ தேசம் புரிந்து கொள்கின்ற வகையில் இன்று சமாதானப் பய ணம் தொடர்கின்றது.

பயங்கரவாதிகள் யார்? என்கின்ற வகையிலே சர்வதேச சமூகம் புரிந்து கொள்கின்ற நிலைமையில் இந்தச் சமாதானப் பயணம் தொடர்கின்றது எனக் குறிப்பிட்டார்.

பேச்சுவார்த்தை மேசைகளில் தமிழ்மக்களின் இன்றைய உண்மையான நிலையை உலகம் உணர்ந்து கொள்ளக்கூடிய வகையில் எடுத்துரைத்திருக்கின்றோம்.

நாம் சந்திக்கப்போகும் தேர்தல்களம் ஒன்றிணைந்த தமிழ்த் தேசியத்துக்காக இணைந்திருக்கிறோம் என்பதை வெளிப்படுத்தப்போகின்றது.

ஒரு தேசியத் தலைமையின் கழ், ஒரு குடையின் கீழ் இணைந்திருக்கின்றது என்கின்ற உண்மையை எடுத்துக்காட்டுகின்ற ஒரு தேர்தல் போர் ஒன்றை நாம் தொடுத்துள்ளோம்.

நாம் சந்தித்த பெரும் போர்களில் நாம் இறுதியாகச் சந்திக்கப்போகும் தேர்தல் களமானது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை ஆதரித்து வீட்டுச்சின்னத்திற்கு புள்ளடியிட்டு வெற்றிபெறச்செய்யும் ஒரு போராகவே கருதுகின்றோம்.

ஜப்பான் பல்கலைக்கழகத்தில்

## முதுமாணிப் பட்டத்தைப் மேற்கொள்ள கல்வி அமைச்சு நடவடிக்கை

நாட்டிலுள்ள அரசாங்கப் பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஜப்பானிய நகுட்டோ பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டப் படிப்பை மேற்கொள்வதற்கு மனிதவள கல்வி அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

இந்தப் புலமைப்பரிசில் திட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்கு கற்பித்தலில் 3 வருடம்அனுபவம் கொண்ட 35 வயதிற்கு உட்பட்ட ஆசிரியர்கள், சேவைக்கால ஆசிரியஆலோசகர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பப் படிவங்களை ஏப்ரல் 15 ஆம் திகதிக்கு முன்னர் மாகாணக் கல்விப்பணிப்பாளர் ஊடாக சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய முகவர் நிலையம், கொழும்பு - 7 என்றமுகவரிக்கு அனுப்பிவைக்கவும். (122)

# முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு வாக்களிக்க இம்முறை சந்தர்ப்பம்

## அரச அதிபர் இமெல்டா சுகுமார்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம் திகதி இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலின்போது வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டமையால் முல்லைத்தீவு மாவட்ட மக்கள் மிகவும் மகிழ்ச்சியடைவதாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலின்பொது, முல்லைத்தீவ மாவட்ட மக்கள் வாக்களிப்பதற்காக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக நமது செய்தியாளரின் வினாவிற்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத்தெரிவித்த அவர் நீண்டகாலமாக இந்தப்பகுதி மக்கள் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படவில்லை இந்த மாவட்டத் தில் மொத்தமாக 52,517 வாக்காளர்கள் உள்ளார்கள்.

இந்தமுறை வாக்களிப்பதற்காக முல்லைத்தீவு மாவட்ட மக்கள் மிகவும் ஆர்வமாக இருக்கிறார்கள். இந்த மக்கள் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகளை நாம் செய்துவருகிறோம். இது தொடர்பாக அதிகாரிகளுக்கு உரிய பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன.

மக்களை வாக்குச்சாவடிகளுக்கு அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவிட்டன. இதற்காக 50 பேரூந்துகள் வவுனியாவில் இருந்து அனுப்பப்பட்டுள்ளன.

இதே வேளை, நாமும் இங்குள்ள 50 இற்கு மேற்பட்ட பேரூந்துகள் மற்றும் வாகனங்களைப் பயன்படுத்தவுள்ளோம். முதல் நாளே ஓமந்தைப் பகுதியை அண்மித்த பகுதிகளில் மக்கள் தங்கிநின்று அதிகாலை வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவர்களுக்கான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இந்த மக்கள் வாக்களிப்பது தொடர்பான அறிவுறுத்தல்கள் கிராமசேவகரின் ஊடாக வழங்கப்பட்டுள்ளன.

இங்கு தேர்தல் கடமைகளில் 350 ற்கும் மேற்பட்ட அலுவலர்கள் கடமையாற்றவுள்ளனர். கடமைகள் தொடர்பாக இவர்களுக்கு இரண்டு பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார். (03)

# தமிழர்கள் சுயமரியாதையுடையவரென்பதை எடுத்துக் கூறிய தந்தை செல்வநாயகம்



**நேற்று தந்தை செல்வாவினுடைய பிறந்ததினமாகும். தந்தை செல்வாவை நினைவு கூரும் முகமாக இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது**

அவர் ஒரு சட்டமேதை உயர் நீதிமன்ற நீதியரசராக அவர் வருவார் என்று எதிர்பார்த்திருந்தனர் பலர். அவர் எந்தப் பெரிய பதவியையும், பட்டத்தையும் ஏற்க விரும்பவில்லை. அவரது எண்ணம் எப்போதும் ஒன்றைப்பற்றியதாகவே இருந்தது. இலங்கைத்தீவில் வாழும் தமிழ்மக்கள் சுயமரியாதையுடனும், சுயகௌரவத்துடனும் வாழவேண்டும் என்பதே அவரது ஒரே எண்ணமாக இருந்தது. அதற்காக அவர் எத்தனையோ தியாகங்களைச் செய்திருந்தார். ஆனால், தான் பெரிய தியாகம் செய்ததாக பீற்றிக்கொள்ளவில்லை அவர். தமிழ் மக்கள் பிரதேசவேறுபாடுகளின்றி ஒன்றுபடவேண்டும் என்று பாடுபட்டார். மட்டக்களப்பு, வன்னி, யாழ்ப்பாணம் ஆகிய அனைத்துப் பகுதிகளுக்கும் சென்றார். மக்களை ஒற்றுமைப்படுத்தி வெற்றியும் கண்டார். இஸ்லாமியத் தமிழர்களை தனது கட்சியில் இணைத்து, நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறச் செய்தார். இவ்வாறு தமிழ்மக்கள் அனைவரையும் ஒற்றுமைப்படுத்தி இணைப்பாட்சியில் தமிழரசு காண விளைந்தவர் தந்தை செல்வாவே தான். அப்பெரியவரின் பிறந்த நினைவு நாள் தான் நேற்று. ஆம் மார்ச் 31 ஆம் திகதி தந்தை செல்வாவின் பிறந்தநாள்.

போக்கிரிகளின் புகலிடம் அரசியல் என்று கூறுவார்கள். அதனைப் பொய்யாக்கியவர் தந்தை செல்வா. அவரது நேர்மையை அவரது அரசியல் எதிரிகளே போற்றினர், வியந்தனர். செல்வநாயகத்துடன் பேசுவது என்பது மிகவும் கஷ்டமான விடயம். ஏனெனில், எதைப் பற்றி அவருடன் பேசினாலும் அதில் தமிழ் மக்களின் நலன் பற்றியே அதிக நாட்டம் கொள்வார் என்று காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்க - தந்தை செல்வாவின் குண இயல்புகளை பற்றிக்கூறியுள்ளார். எப்பொழுதும் தமிழ் மக்களின் உரிமைகள் பற்றிய சிந்தனையுடன் வாழ்ந்த பெரியவரை நினைவு கொள்ளவேண்டியது தமிழ் மக்களின் கடமையாகும்.

இணைப்பாட்சி என்றால் பிரிவினை என்றனர் சிலர். தமிழ் மக்களின் உரிமைகளை கொடு என்றால் - வகுப்பு வாதம் என்றனர் வேறு சிலர். வாழு, வாழ விடு என்றால் - இன வாதி என்றனர் இன்னொரு பகுதியினர்.

தந்தை செல்வா 1956 இலிருந்து தமிழ் மக்களின் உரிமைக்காகப் பல்வேறு போராட்டங்களை நடத்தியுள்ளார். தந்தையின் போராட்டங்கள் எல்லாம் ஆயுதமற்ற அறப்போராட்டங்களாகவே அமைந்திருந்தன. 1956 ஜுன் சிங்களம் மட்டும் சட்டம் நாடாளுமன்றத்திலே கொண்டுவரப்பட்டபோது, அந்த நாடாளுமன்றத்திற்கு முன்னால் காலி முகத்திடலிலே சத்திய வேள்வியை நடத்தினார். தொண்டர்களுடன் தானும் இருந்து ஏவிவிடப்பட்ட சிங்கள காடையரின் அடி உதைக்கு ஆளாகினார். பின்னர் வரலாற்றுப்புகழ்மிக்க திருமலை யாத்திரையை மேற்கொண்டார். பின்னர் சிங்கள ஸ்ரீ எதிர்ப்புபோராட்டம் - அதிலே குற்றவாளியாகக் கண்டு மட்டக்களப்புச் சிறையிலே அடைக்கப்பட்டார். 1956 இல் தென் தமிழீழ மக்கள்மீது ஏவிவிடப்பட்ட வன்முறை மீண்டும் 1958 இல் முழுத்தமிழினம் மீதும் ஏவிவிடப்பட்டது. இந்த வன்முறையால் அவதிப்பட்ட மக்களை - பெரிய சரக்குக் கப்பல்களில் ஏற்றித் தமிழர் பகுதிகளுக்கு அனுப்பிவைத்தார். அதாவது தமிழ்மக்களை அவர்களது தாயகத்திற்கு அனுப்பிவைத்தார். தந்தை செல்வாவைக் கேலி பேசியவர்கள் உணரும் வகையில் இது ஒரு உண்மையை வெளிப்படுத்தியது - தமிழ் மக்களுக்கு என்று ஒரு தாயகம் இருந்தபடியால்தான் அவர்களை அங்கு அனுப்பினார்கள் என்பதே அந்த உண்மையாகும்.

இதேபோன்றே 1983 இல் இடம்பெற்ற பேரினவாத செயலின் பொழுதும் தமிழ்மக்களை அவர்களது தாயகத்திற்கு அனுப்பியமை குறிப்பிடத்தக்கதாகும். 1958 வன்முறையை அடுத்து தந்தை செல்வாவும், அவருடைய தொண்டர்களும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர். இதிலே வேடிக்கை என்னவென்றால் - வன்செயலைத்தூண்டியவர்கள், ஊக்குவித்தவர்கள், அதை நின்று செய்தவர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை என்பதேயாகும். பின்னர் 1961 இல் தமிழ்ப்பகுதியிலுள்ள அரச நிர்வாகம் இரண்டு திங்கள் முற்றாக இயங்கவில்லை. தந்தை செல்வாவின் தலைமையில் மறியல் போராட்டம் - அரச நிர்வாகத்தை செயலிழக்கச்செய்தது. இதனைத் தொடர்ந்து தமிழரசு முத்திரை வெளியிட்டு தனியான ஓர் அஞ்சல் சேவையை நடாத்தி, சட்டமறுப்பு போராட்டம் செய்தார் தந்தை செல்வா. இப்போராட்டத்தின் வடிவை எதிர்பார்த்திராத சிங்கள அரசு இப்போராட்டத்தை நசுக்க இராணுவத்தைப் பயன்படுத்தியது. நள்ளிரவு வேளையில் இராணுவம் அமைதிவழியில், அறவழியில் போராடிய மக்கள்மீது பாய்ந்தது. தலைவர்கள் கைதுசெய்யப்பட்டனர். இராணுவண்டிகளில் பெண்கள் பலவந்தமாக ஏற்றப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டனர். அவசரகால நிலைச்சட்டம் பிறப்பிக்கப்பட்டது. தந்தை செல்வாவும் மற்றவர்களும் கொழும்புக்குக் கொண்டுசெல்லப்பட்டு, பனாகோடை இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டனர். தந்தை மூளை அறுவை மருத்துவத்திற்காக இலண்டன் சென்று திரும்பிவந்தார். நோய்வாய்ப்பட்ட நிலையிலும் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்காக அவர் களைத்துவிடவில்லை. இதன்பின்னர் அவர் இன்னுமொரு சட்ட மறுப்புப் போராட்டத்தை நடத்தியிருந்தார். அப்போராட்டம் பற்றி வெளியிலே அவ்வளவாகப் பேசப்படுவதில்லை. ஆனால் அது மிகவும் முக்கியமான ஒன்றாகும். தமிழ்ப்பிள்ளைகளைப் புத்தமதத்திற்கு மாற்றுவதற்கான முயற்சிகளில் சிங்கள அரசு இறங்கியது. வாக்குரிமை, குடியுரிமை, மொழியுரிமை, நில உரிமை என்பவற்றில் கைவைத்த சிங்கள அரசு- மதத்திலும் கைவைத்து தமிழர்களை முற்றாக அழித்தொழிக்க முனைந்தது. புத்தமதப் பாடசாலைகளைத் தமிழ்ப்பகுதிகளில் நிறுவுவதன்மூலம் - தமிழ்ப்பிள்ளைகளை, அவர்களது பெற்றோர்களை மதம் மாற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டன. புத்தமதப் பாடசாலைகள் தொடங்கப்பட்டன. சிங்களச் சதியைப் புரிந்துகொண்ட செல்வா - சிங்கள அரசை இவ்வாறு நடக்கவேண்டாம் என்று கேட்டுக்கொண்டார். ஆனால் சிங்கள அரசு தனது திட்டத்தை நடைமுறைப்படுத்தியது. தந்தை செல்வா சட்டமறுப்புப்போரைத் தொடங்கினார். தானும் சட்டத்திற்குப் புறம்பாகப் பள்ளிக்கூடங்களை அமைத்தார். கோப்பாய் நாடாளுமன்ற உறுப்பினர் சி.கதிரவேலுப்பிள்ளை அந்தப் பாடசாலையின் மேலாளராக நியமிக்கப்பட்டார்.

புத்தமதப் பாடசாலைகளில் படித்த பிள்ளைகளின் பெற்றோரிடம் சென்று உண்மைநிலையை விளங்கப்படுத்தி, அப்பிள்ளைகளைத் தமது பாடசாலைகளில் கல்விகற்கத் தூண்டி வெற்றியும் பெற்றார். நேற்று தந்தை செல்வாவின் பிறந்த நினைவு நாள் மட்டுமல்ல, தந்தைவழியில் தூய்மையாகப் பாடுபட்டு மறைந்த சிந்தனைச் சிற்பி சி.கதிரவேலுப்பிள்ளையின் மறைந்த நினைவு நாளாகவும் இருக்கிறது.

வடக்கு -கிழக்கு என்று நாம் கூறக்கூடாது. நாம் முதலில் எமது எண்ணத்தில் தமிழீழம் என்று நிலைநிறுத்தவேண்டும். கிழக்கு மாகாணம் என்று கூறாது தென் தமிழீழம் என்று கூறவேண்டும். வடக்கு- கிழக்கு என்று கூறுவதால், முழு இலங்கைத்தீவையும் நாம் மனதில் வைத்திருப்பதாகத்தான் கருதவேண்டும். எனவே, தமிழீழம் என்ற எண்ணத்தை நாம் முழு அளவில் ஏற்றுக்கொண்டவர்களாக இருக்கவேண்டுமெனில், தென்தமிழீழம் என்று எப்பொழுதும் பயன்படுத்தவேண்டும் என்று பாடம் நடத்தியவர் சி.கதிரவேலுப்பிள்ளை.

இவர் யாழ்ப்பாணத்தில் மிகப் பிரபலமான குடியியல் வழக்கறிஞர். அவர் வழக்குகளில் பெற்ற செல்வத்தை தமிழர் போராட்டங்களுக்கு அள்ளிக்கொடுத்த பெருந்தகை. தமிழர் விடுதலைக்கூட்டணி மாவட்ட அபிவிருத்திச்சபையை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று வாதிட்டார். அபிவிருத்தியும் விடுதலையும் ஒன்றாக இருக்கமுடியாது என்று வாதிட்டவர். ஆனால் தமிழின ஒற்றுமைக்காகக் கூட்டணியைப் பிளவு படுத்தாது இயங்கியவர்.

அமெரிக்காவில் மசூசெட்ஸ் மாகாணத்து ஆட்சியாளர்கள் - தமிழீழ நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு சி.கதிரவேலுப்பிள்ளைக்கே அழைப்பு விடுத்திருந்தனர். தமிழீழத்தைப் பற்றித் தெளிவாக விளக்கக்கூடிய ஆற்றலுள்ளவர் நீங்களே என்று நாங்கள் கருதுகின்றோம். எனவே, நீங்கள் இதில் கலந்துகொள்ள வேண்டும் என்று எழுதியிருந்தனர். விமானத்தில் நீண்ட பயணம் செய்யக்கூடிய உடல்நலம் இல்லாததால் அவர் அதில் கலந்துகொள்ளாமல் த.வி.கூட்டணித் தலைவர் சிவசிதம்பரத்தை அதில் பங்குகொள்ளவைத்தார். தலைவர் பங்குகொள்வதுதான் சிறந்ததென விளக்கி அவரை அங்கு செல்ல உதவிகள் செய்தார்.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயற்பாடுகளில் சிறிது கவலைகொண்ட கதிரவேலுப்பிள்ளை - தமிழ்மக்கள் வேண்டிநிற்பது என்ன? என்பதை விளக்கி இந்தியா செல்லத் தீர்மானித்தார்.

த.வி. தலைமை - தமிழர்களின் நிலைப்பாடு பற்றி சரியாக எடுத்துக்கூறவில்லை என்பது அவரது மனதிலே தோன்றிவிட்ட உண்மையாகும். எனவே, அவர் இந்தியத்தலைவர்கள் பலரைச் சந்தித்து, தமிழ்மக்கள் ஏன் தமிழீழம் கேட்கிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்தினார். பின்னர் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியைச் சந்திக்கச் சம்மதம் பெற்று? விமானமேறச் சென்னை விமானநிலையம் சென்றார். அங்கே மயங்கிவிழுந்து பின்னர் மரணமடைந்தார்.

தந்தை செல்வாவின் அடியொற்றி, தந்தை செல்வாவைப்போன்று அமைதியாகவும் மென்மையாகவும் இலட்சியத்தில் உறுதியாகவும் இருந்த சி.கதிரவேலுப்பிள்ளை - தந்தை செல்வாவின் பிறந்தநாளில் இறந்துவிட்டார். தந்தை செல்வாவைத் தமிழினம் நினைவு கூரும் பொழுது கதிரவேலுப்பிள்ளையையும் நினைவுகூரவேண்டும் என்பது இயற்கையின் கடமையாகும்.

ஆம் இந்த இருபெரும் தலைவர்களை நாம் நினைவுகூரும் இந்த 31 ஆம் திகதி மிகமுக்கியமான நாளாக இவ்வாண்டு வந்துள்ளது. சந்திரிகா நிமித்திகர்களின் சொற்படி ஏப்ரல் 2 இல் தேர்தலை நடாத்தவுள்ளார். சந்திரிகாவுக்கு நிமித்திகர் நல்ல நேரம் குறித்துக் கூறியிருப்பார். ஆனால் நிமித்திகர் குறித்த நேரம் தமிழ்மக்களுக்கு மிகமிக நல்லநேரம். ஏனெனில், தியாக வாழ்வு வாழ்ந்த தந்தை செல்வா, கதிரவேலுப்பிள்ளை ஆகியோரின் நினைவு நாளான 31 ஆம் திகதி தேர்தல் பரப்புரைகள் ஓய்ந்திருக்கும். வாக்களிப்பு ஒழுங்குகளைச் செய்வதாகவும், மக்கள் ஓய்வாக இருந்து நல்ல முடிவெடுக்கவும், பரப்புரைகள் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருக்கும். தமிழ் மக்கள் தமது உரிமைகளை நிலைநாட்ட உறுதியெடுக்கவேண்டியது மிகமுக்கியமானதாகும்.

தந்தை செல்வாவின் நினைவுநாள்- தமிழ்மக்கள் என்ன செய்யவேண்டும் என்பதை மிகத்தெளிவாக வழிகாட்டிக்கொண்டிருக்கும். தந்தை செல்வாவை இகழ்ந்தவர்கள், கேலி பேசியவர்கள், அவரது போராட்டத்தைக் கொச்சைப்படுத்தியவர்கள், சிங்கள ஆட்சியாளர்களின் எலும்புத் துண்டுகளுக்கு வால் ஆட்டிக்கொண்டிருப்பவர்கள், இனத்தைக் காட்டிக் கொடுத்தவர்கள் யார்யார் என்பதை அறிய இந்த நாள் உதவியாக இருக்கும்.

◆

## புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் பகுதி XXXVII

**சிவா சின்னப்பொடி**

# பிள்ளைகளை வளர்க்கின்ற பெற்றோர் அந்நியச் சூழலில் விடும் தவறுகள்...



ஆறு வயதான அந்தக் குழந்தைக்கு மனிதர்களை ஏற்றத் தாழ்வாகப் பார்க்கும் கருத்தூட்டப்பட்டிருப்பதைப் பார்த்து அந்த ஆசிரியர் அதிர்ச்சியடைந்தார்.

மனிதர்கள் எல்லோரும் சமத்துவமானவர்கள். எல்லோருடைய உடலிலும் ஒரே நிறமுள்ள இரத்தம்தான் ஓடுகிறது என்று அவர் அந்தக் குழந்தைக்குச் சொல்லிப் புரியவைக்க முயன்றார். ஆனால், அந்தக் குழந்தையின் நடவடிக்கைகளில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. அது ஆபிரிக்கக் கறுப்பினக் குழந்தைகளை வெறுத்தது. தனது வகுப்பில் படித்த வேறு இரண்டு தமிழ்க் குழந்தைகளுடன்கூட சேர மறுத்தது. எந்தவிதமான கூட்டுச் செயற்பாட்டிலும் அந்தக் குழந்தையால் ஈடுபடமுடியவிலலை.

ஒருநாள் அந்தக் குழந்தையைத் தனியே அழைத்து அதனுடைய விருப்பங்கள், பிரச்சினைகள் பற்றிக் கேட்டபோது - கறுப்பர்கள் திருடர்கள் என்றும், அரேபியர்கள் அசுத்தமானவர்கள் என்றும், தமிழர்கள் எல்லோரும் சமத்துவமானவர்கள் அல்ல என்றும் அது கருத்துக்கூறியது.

இரத்தம் சிவப்பு நிறம் என்றாலும் அதில் வேறு பிரிவுகள் இருக்கு. எல்லா இரத்தமும் ஒன்றுடன் ஒன்றுசேராது என்று அந்தக் குழந்தை விளக்கம் வேறு சொன்னது. இதை யார் உனக்குச் சொல்லித்தந்தது என்று கேட்டபோது 'அப்பா' என்று குழந்தை பதில் சொன்னது.

ஆசிரியருக்குப் பிரச்சினை எங்கே இருக்கின்றது என்று புரிந்துவிட்டது.

உடனே அந்த அப்பாவைத் தன்னை வந்து சந்திக்கும்படி குழந்தையிடம் கடிதம் கொடுத்து அனுப்பினார். அந்தக் கடிதத்துக்கு அவர் வரவில்லை. இரண்டாவது கடிதம், குழந்தையின் பெற்றோர் பார்வைக்கான நாளாந்தக் கையேட்டில் எழுதி அனுப்பப்பட்டது.

அதற்கும் அவர் வரவில்லை. பாடசாலை நிர்வாகம் கடைசியாக உடனே தங்களை வந்து சந்திக்கும்படி பதிவுத் தபால்மூலம் அழைப்பு விடுத்தது. அத்துடன் குழந்தையைப் பாடசாலையிலிருந்து அழைத்துச் செல்லவரும் அதன் தாயிடமும் - தாய் அல்லது தந்தை இருவரில் ஒருவர் அல்லது இருவரும் வந்து தங்களைச் சந்திக்கவேண்டும் என்று நேரடியாகவும் அந்தக் குழந்தையின் வகுப்பாசிரியர் அழைப்பு விடுத்தார்.

அதற்குள் அந்தக் குழந்தை தொடர்பாக பாடசாலை மட்டத்தில் ஒரு மதிப்பீடு செய்யப்பட்டது. குழந்தையின் கிரகிக்கும் திறன் நடத்தை - செயற்பாடு - இவை பற்றியெல்லாம் ஆராயப்பட்டது.

குழந்தை உளவியல் பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட்டது. அந்தக் குழந்தையைப் பரிசோதித்த உளவியல் மருத்துவர் அந்தக் குழந்தையின் மனவளர்ச்சி என்பது இயல்பான நிலையில் இல்லை என்றும், அதனுடைய வீட்டுச் சூழல், புறச்சூழல்என்று ஒன்றுக்கொன்று எதிரான நிலையில் அது சிக்கித் தவிக்கின்றதென்றும் இந்தநிலை நீடித்தால் அதன் மன வளர்ச்சி பாதிக்கப்படும் என்றும் அறிக்கை கொடுத்திருந்தார்.

பாடசாலை நிர்வாகம் கொடுத்த திகதிக்கு அந்தக் குழந்தையின் அப்பாவும அம்மாவும் பாடசாலைக்குச் சென்றனர். அவர்களுடன் உரையாடுவதற்காக ஒரு தமிழ் மொழிபெயர்ப்பாளரையும் பாடசாலை நிர்வாகம் வரவழைத்திருந்தது.

அன்றைய சந்திப்பில் அந்தக் குழந்தையினுடைய வகுப்பாசிரியரும் குழந்தையைப் பரிசோதித்த உளநல மருத்துவரும் கலந்து கொண்டனர்.

குழந்தைக்கு உள்ள பிரச்சினை பற்றி வகுப்பாசிரியர் பிரெஞ்சில் விபரித்துக் கூறியதை தமிழ் மொழிபெயர்ப்பாளர் தமிழில் மொழி பெயர்த்துச் சொன்னார்.

தமிழ் மொழிபெயர்ப்பாளரை அழைத்தது அந்தக் குழந்தையின் தந்தைக்குப் பிடிக்கவில்லை. நாங்கள் என்ன எழுதப் படிக்கத் தெரியாத லோ கிளாசா - நாங்கள் ஊரில கௌரவமான உயர்ந்த குடும்பம் - எங்களுக்கு மொழி பெயர்ப்பாளரை வைத்து நீங்கள் அவமதிச்சுப் போட்டியள் எனக்கு இங்கிலீஸ் தெரியும். அதிலையே பேசலாம்- மொழி பெயர்ப்பாளர் தேவை இல்லை'. என்று ஆங்கிலத்தில் பொரிஞ்சு தள்ளினார்.

ஆங்கிலமும் தெரிந்த இலங்கைத் தமிழரான அந்தப் மொழிபெயர்ப்பாளர் - அந்தக் கனவான் சொன்னதை அப்படியே பிரெஞ்சில் மொழி பெயர்த்துக் கூறினார். ஆசிரியருக்குக் கோபம் வந்துவிட்டது. 'நீங்கள் தமிழரா அல்லது இங்கிலீஸ் காரரா?' என்று கோபமாகக் கேட்டார். **'WE are Srilankan Tamils'** என்று அந்தக் கனவான் நுனி நாக்கு இங்கிலீஸில் பதில் சொன்னார்.

அப்ப தமிழரின் தாய்மொழி இங்கிலீஸா? என்று அந்த ஆசிரியர் திருப்பிக் கேட்டார்.

'ஐஸே நீர் எங்களைக் கூப்பிட்டு இன்சல்ட் பண்ணுறீர்' என்று அந்தக் கனவான் கத்தினார்.'

'எங்களுடைய நாட்டு மொழி பிரெஞ்சு. உங்களுடைய தாய்மொழி தமிழ். உங்களுக்கு நாங்கள் சொல்வது புரிய வேண்டும் என்பதற்காகத் தான் - உங்கள் மொழியைப் பேசுற ஒருவரை மொழி பெயர்ப்பாளராக வைத்திருக்கிறம்.

(தொடரும்...)

# பாக்தாத்தில் குண்டுத் தாக்குதல் ஐந்து கூட்டுப் படையினர் பலி!

(பாக்தாத்)

ஈராக்கின் மேற்கு பாக்தாத் நகரில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 5 படையினர் கொல்லப்பட்டனர்.



அல் - அன்பாத் நகரத்தின் வீதியோரத்தில் புதைக்கப்பட்டிருந்த குண்டின் மீது அமெரிக்கக் கூட்டுப் படைகள் பயணம்செய்த வாகனம் ஏறியபோதே, இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் 5 கூட்டுப்படைகள் கொல்லப்பட்டதை அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தினார்.

அதேவேளை, கொல்லப்பட்ட கூட்டுப்படையினர் எந்த நாட்டவர் என்பதை அந்த அதிகாரி உறுதிப் படுத்தவில்லை.

இதேவேளை, மேற்கு பாக்தாத்திலுள்ள பலூஜா நகரில் கார்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் பலர் கொல்லப்பட்டதாக தெரியவருகிறது.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தாக்குதலுக்குள்ளான கார்கள் தீப்பற்றி எரிந்ததாகவும், சடலங்கள் பல சிதறிக்கிடந்ததாகவும் - அவை கருகியிருந்ததாகவும் ரொய்ட்டர் செய்தி ஒன்று தெரிவித்தது.

கூட்டுப்படைகள் பயன்படுத்தும் கார்களே தாக்குதலுக்குள்ளானதாகவும் அந்தக் தகவல்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை, ஈராக்கின் வட பகுதியிலுள்ள பலூஜா நகரில் நேற்று இடம்பெற்ற கார்க்குண்டுத் தாக்குதல் ஒன்றில் 12 பேர் காயமுற்றதாக இன்னொரு செய்தி தெரிவித்தது.

இந்தத் தாக்குதலில் காயமுற்றவர்களில் பொலிஸார் மற்றும் பொது மக்களும் அடங்குவதாகவும், பல கார்கள் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே, நேற்று முன்தினம் ரமாடி நகரில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் ஒரு கூட்டுப்படை வீரர் கொல்லப்பட்டார்.

ரோந்து சென்ற படையினர், வீதியோரத்தில் புதைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்த சம்பவத்திலேயே கூட்டுப் படைச் சிப்பாய் கொல்லப் பட்டார்.

கடந்த வெள்ளியன்றும் பலூஜாவில் அமெரிக்கப் படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

உலக நோக்கு

## ஆப்கானில் அபிவிருத்தி தொடர்பாக ஐம்பது நாடுகளின் அதிகாரிகள் பேர்லினில்கூடி கலந்துரையாடல்



ஆப்கானிஸ்தான் நாட்டினை எதிர்காலத்தில் அபிவிருத்தி மூலம் கட்டியெழுப்புவதற்காக 50 நாடுகளின் அதிகாரிகள் ஜேர்மன் தலைநகர் பேர்லினில் கூடி கலந்துரையாடுகின்றனர்.

இரு நாள் நடைபெறவுள்ள இந்த கலந்துரையாடலுக்கு ஆப்கான் ஜனாதிபதி ஹமீட் ஹர்சாயும் கலந்துகொள்ளுகின்றார். அடுத்த 7 வருடங்களில் ஆப்கானை கட்டியெழுப்புவதற்கு 27.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை இந்த நாடுகளிடம் ஹமீட் ஹர்சாய் கேட்டுள்ளார்.

இதேவேளை குழப்பமடைந்துள்ள ஆப்கானை கட்டியெழுப்புவதற்கு சர்வதேச சமூகம் உதவி வழங்கவில்லை எனில், அபிவிருத்திப் பணிகள் சாத்திய மில்லையென ஐ.நாசபை எச்சரித்துள்ளது.

அத்துடன், சர்வதேச ரீதியில் ஆப்கான் ஒரு வறிய நாடாகும். சர்வதேச சமூகத்தின் உதவியில்லையெனில் அந்த நாடு மீளவும் சட்டவிரோதமான போதை விற்பனையிலேயே தங்கியிருக்வேண்டும் எனவும் ஐ.நா சபை மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை அடுத்த 2014 ஆம் ஆண்டுக்குள் ஆப்கான் நாட்டை உயர்த்தி சட்டபூர்வமான நிலைக்கு இட்டுச்செல்வதுடன், நேரடியான ஜனநாயக முறைக்கும் ஸ்திரமான ஆட்சித்தன்மைக்கும் இட்டுச் செல்லவுள்ளதாக, ஜனாதிபதி ஹமீட் ஹர்சாய் தெரிவித்தார்.

ஆனால் ஹமீட் ஹர்சாய் தனது திட்டத்தை நடைமுறைப்படுத்த நீண்டகாலம் எடுக்கும் என்கிறார். பி.பிசி நிருபரான கிறிஸ்பின்டொரோல்ட் அவர் இதற்கு கூறும் காரணம் யாதெனில்- ஆப்கான் அரசாங்கம் தறபோது தலைநகர் காபூலை மட்டுமே தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. ஆனால் தலிபான் போராளிகள் ஆப்கானின் தென்பகுதியில் பல பிரதேசங்களை கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர்.

அத்துடன், ஆப்கான் அரசாங்கம் இவ்வருடம் ஜூனில் நடக்கவுள்ள ஜனாதிபதித் தேர்தலை செட்டம்பருக்கு ஒத்திவைத்துள்ளது. இதற்கு காரணம் பாதுகாப்புப் பிரச்சனையும் வாக்காளரைப் பதிவுசெய்தல் முடியாமையுமாகும்.

இதேவேளை ஆப்கான் அரசு சர்வதேச சமூகத்துக்கு தனது நாடு தொடர்பாக என்ன முடிவை தெரிவிகக் போகின்றது என்பதைப் பொறுத்தே அவற்றின் உதவிகள் அமையும் என, ஐ.நாவின் அதிகாரியான ஜுன் ஆர்னோல்ட் தெரிவித்தார்.

# மிகஉயர்ந்த போர்க்களத்துக்கு இந்திய ஜனாதிபதி விஜயம்!



உலகின் மிக உயரத்தில் உள்ள போர்க்களத்திற்கு ஜனாதிபதி அப்துல்கலாம் நாளை சென்று சாதனை நிகழ்த்தவுள்ளார்.

நாடாளுமன்ற தேர்தல் பிரசாரம் களை கட்டியுள்ளதைத் தொடர்ந்து ஜனாதிபதி அப்துல்கலாம் தான் கலந்துகொள்ளும் அரசு நிகழ்ச்சிகளை இரத்து செய்துவிட்டார்.

கடந்த பெப்ரவரி மாதம் 29 ஆம் திகதி முதல் ஜனாதிபதி அப்துல்கலாம் எந்தவொரு அரச நிகழ்சிகளிலும் கலந்துகொள்ளவில்லை. தேர்தல் விதிமுறை அமுல்படுத்தப்பட்டதால், அவர் அரச விழாக்களில் கலந்து கொள்வதை தவிர்த்துள்ளதாக தெரிகிறது.


எதிர்வரும் 2 ஆம் திகதி ஜனாதிபதி அப்துல்கலாம் விமானம் மூலம் இமயமலை அடிவாரம் செல்கிறார். பின்னர் அங்கிருந்து ஹெலிகொப்டர் மூலம் இமயமலையின் உலகிலேயே உயரமான இடத்திலுள்ள சியாசன் பள்ளத்துக்குச் செல்கிறார்.

அங்கு முகாமிலிருக்கின்ற இராணுவத்தினரை சந்தித்து பேசும் அப்துல்கலாம் அவர்களது குடும்பத்தினரையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

பிரபல விஞ்ஞானியான டொக்டர் அப்துல்கலாம் உலகத்திலேயே மிக உயரமான 'சியாசென்னில்' போர்க்களத்துக்குச் செல்வது ஒரு சாதனையாகும். சியாசென் போர்க்களத்துக்குச் செல்லும் முதல் ஜனாதிபதி என்ற பெருமையையும் அப்துல்கலாம் பெறுகிறார்.

சியாசென் போர்க்களத்தைப் பார்த்தபின்னர் அன்று மாலையே ஜனாதிபதி அப்துல்கலாம் டெல்கி திரும்புகிறார்.

# பத்திரிகைகள் மீது வைகோ புகழாரம்!



பொடா சிறைவாசத்தின்போது என் மீதும், என் கட்சி மீதும் பத்திரிகைகள் காட்டிய பேராதரவுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன் என்று ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

கோவையில் செய்தியாளர்களைச் சந்தித்த வைகோ பேசுகையில் -

பொடா சிறைவாசத்தின்போது என்னைப் பற்றியோ, என் கட்சியைப் பற்றியோ, என் கட்சியினர் பற்றியோ ஒரு வார்த் தைகூட பத்திரிகைகளில் தவறாக செய்தி வந்ததில்லை.

ம.தி.மு.க மீதும், என் மீதும் பத்திரிகைகள் அளவு கடந்த ஆதரவைக் காட்டின.

எனது புகழை அதிகப்படுத்தியுள்ளீர்கள். 10 ஆயிரம் பொதுக்கூட்டங்களில் பேசினாலும் கிடைக்காத பாராட்டை உங்களது செய்திகள் மூலம் எனக்குத் தேடிக்கொடுத்துள்ளீர்கள்.

உங்கள் அனைவரதும் ஆதரவுக்கும் நான் கடமைப்பட்டுள்ளேன். எனது இதயத்தின் அடி ஆழத்திலிருந்து நன்றி கூறுகிறேன் என்று வைகோ கூறியபோது செய்தியாளர்கள் நெகிழ்ச்சி அடைந்தனர்.

பத்திரிகையாளர்களைச் சற்றும் மதிக்காத முதல்வர் ஜெயலலிதா பா.ம.க. நிறுவுனர் இராமதாஸ் போன்ற அரசியல்வாதிகளைப் பார்த்துவிட்டு, வைகோ போன்ற அரசியல்வாதிகளையும் பார்க்கும் பத்திரிகையாளர்களுக்கு வைகோவின் பேச்சு நெகிழ்வை ஏற்படுத்தியுள்ளது.

# மீட்புப் பணிக்குச் சென்ற ஹெலி விழுந்து நொருங்கி 5 பேர் பலி!

## ஸ்பெயின் நாட்டில் சம்பவம்

ஸ்பெயின் நாட்டில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு சுற்றுலா பஸ், விபத்தில் சிக்கியது. கானரிதீவில் மலைப்பாதையில் அந்த பஸ் உருண்டு விழுந்தது.

பஸ்ஸில் கிக்கி உயிருக்கு போராடிக்கொண்டிருந்த சுற்றுலாப் பயணிகளை மீட்க, ஒரு ஹெலி கொப்டர் அனுப்பிவைக்கப்பட்டது. அநத ஹெலிகொப்டர் 3 பயணிகளை காப்பாற்றி அவர்களை ஏற்றிக் கொண்டு மேலே கிளம்பியது.

அப்போது அந்த ஹெலிகொப்டர் மின்சார கம்பியில் சிக்கியதில் அந்த ஹெலிகொப்டர் தீ பிடித்துக் கொண்டது. தீயில் எரிந்தபடியே அந்த ஹெலிகொப்டர் விழுந்து நொருங்கியது. ஹெலிகொப்டரில் இருந்த 3 பயணிகள் மற்றும் 2 சிற்பந்திகளும் பலியாகிவிட்டனர்.

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**22) சித்தங்கேணி - அரசடி - வடலியடைப்பு - பனிப்புலம் - பண்டத்தரிப்பு - பிரான்பற்று - தொட்டிலடி - மாசியப்பிட்டி - கந்தரோடை - சுன்னாகம் - மல்லாகம் - தெல்லிப்பளை மகாஜனா - அளவெட்டி மீண்டும் அதே பாதையில் சித்தங்கேணி**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| புறப்படும் நேரம் | - | 7.00 | 9.30 | 12.45 | 3.00 |
| திரும்பும் நேரம் | - | 8.15 | 10.45 | 2.00 | 4.15 |

**23) உயரப்புலம் ஆனைக்கோட்டை - நவாலி (அரசடி) சென்பீற்றஸ் தேவாலயம் - மூத்தவிநாயகர் கோவிலடி - மானிப்பாய் தெற்கு - சுதுமலை - தாவடி - சுன்னாகம் - மல்லாகம் - தெல்லிப்பளை மகாஜனா - அளவெட்டி - மீண்டும் அதே பாதையில் உயரப்புலம்.**

| | | | | |
|---|---|---|---|---|
| புறப்படும் நேரம் | - | 6.30 | 9.30 | 12.30 |
| திரும்பும் நேரம் | - | 8.00 | 11.00 | 2.00 |

**24) இளவாலை - மார்சங்கூடல் - முள்ளானை - பெரியவிளான் - அளவெட்டி - தெல்லிப்பளை மகாஜனா - மல்லாகம் - சுன்னாகம் - மீண்டும் அதே பாதையில் இளவாலை.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| புறப்படும் நேரம் | - | 6.30 | 9.00 | 11.30 | 2.45 |
| திரும்பும் நேரம் | - | 7.45 | 10.15 | 1.30 | 4.00 |

**25. மாதகல் - பண்டத்தரிப்பு - சில்லாலை - பிரான்பற்று - தொட்டிலடி - மாசியப்பிட்டி - கந்தரோடை - சுன்னாகம் - மல்லாகம் - தெல்லிப்பளை மகாஜனா - அளவெட்டி மீண்டும் அதே பாதையில் மாதகல்.**

| | | | | |
|---|---|---|---|---|
| புறப்படும் நேரம் | - | 6.45 | 9.15 | 12.15 |
| திரும்பும் நேரம் | - | 8.00 | 10.45 | 1.45 |

*குறிப்பு:-*

01. புன்னாலைக்கட்டுவன், குட்டியப்புலம் ஆகிய இடங்களில் உள்ள வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்ல விரும்பும் வாக்காளர்கள் - தங்கள் பகுதியிலிருந்து புன்னாலைக்கட்டுவன் சந்தி ஊடாகச் செல்லுகின்ற பேருந்தில் சென்று, புன்னாலைக்கட்டுவன் சந்தியில் இறங்கி அங்கிருந்து மேற்படி வாக்களிப்பு நிலையம் செல்ல வாகன ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

02. கட்டுவன்புலம், தெல்லிப்பளை, தெல்லிப்பளை மகாஜனா, அளவெட்டி, பன்னாலை, இளவாலை ஆகிய வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்ல விரும்பும் வாக்காளர்கள் - தங்கள் பகுதியிலிருந்து மல்லாகம் ஊடாகச் செல்லுகின்ற பேருந்தில் சென்று மல்லாகத்தில் இறங்கி அங்கிருந்து மேற்படி வாக்களிப்பு நிலையங்கள் செல்ல வாகன ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

03. குடத்தனையில் இருந்து முகாமலையில் அமைந்துள்ள வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்ல விரும்பும் வாக்காளர்கள் - தங்கள் பகுதியிலிருந்து பருத்தித்துறை செல்லுகின்ற பேருந்தில் பருத்தித்துறை சென்று, பின் அங்கிருந்து முகமாலை வாக்களிப்பு நிலையம் செல்ல வாகன ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

04. குடாரப்பு பகுதியிலிருந்து பருத்தித்துறை, தும்பளையில் அமைந்துள்ள வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்ல விரும்பும் வாக்காளர்களுக்கு - முகமாலையில் இருந்து பருத்தித்துறை செல்ல வாகன ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

செ.பத்மநாதன்
தெரிவத்தாட்சி அலுவலர்,
தேர்தல் மாவட்ட இல.10, யாழ்ப்பாணம்.

(சி/2376)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தமிழினம்பட்ட இன்னல்களுக்கு முடிவு
# இத் தேர்தலில் ஒன்றுபட்டு வாக்களியுங்

## நல்லூர் பிரசாரக் கூட்டத்தில் இளம்பரிதி உ

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் சுமந்த இன்னல்களுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் நாளைய தேர்தல் முடிவுகள் அமைய தமிழ் மக்கள் ஒன்றிணைந்து ஒரே கொள்கைக்கு வாக்களிக்க வேண்டும் என யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நல்லூர் ஆலய முன்றலில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

மக்கள் புரட்சி வெடிக்கட்டும், சுதந்திர தமிழீழம் மலரட்டும் என குரல் எழுப்பிய தியாகத்தின் உன்னத வடிவமான அண்ணன் திலீபனின் கனவு நனவாகும்காலம் அண்மித்துள்ளது.

எமது மக்கள் சுதந்திரமாகவும், நிம்மதியாகவும் வாழ்வதற்கு ஏற்ற வழிகளை தேர்ந்தெடுக்கும் காலம் நெருங்கிவிட்டது. அதன் நிமித்தம் இந்தத் தேர்தலில் ஒன்றுபட்டு நின்று குரல்கொடுக்க வேண்டிய தேவை ஒன்று ஏற்பட்டிருக்கிறது. சரியான வழியில் தெரிவுசெய்து சரியான தீர்ப்பை வழங்கவேண்டிய வரலாற்றுக் கடமை தமிழ் மக்கள் கையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாவீரர் கனவு நிறைவேறுமா? நிம்மதியான வாழ்வை எம் மக்கள் அடைய முடியுமா? அழிவும், அவலமும் தீருமா? சோகங்கள் மடியுமா? எனப் பல வினாக்கள் தமிழ் மக்களின் மனங்களில் எழுகின்றன. இவற்றுக்கெல்லாம் விடைதரும் தேர்தலே நாளை நடைபெறவுள்ள தேர்தல். அதற்கு மக்கள் அனைவரும் முகம்கொடுக்க வேண்டிய தேவை உள்ளது.

இந்த மண்ணிலே எத்தனை அவலத்தை தமிழ் மக்கள் சுமந்துள்ளார்கள். சொத்தையும், சுகத்தையும் இழந்து அவர்கள் அனுபவித்த கஸ்ரங்கள் எத்தனை? ஆன போதிலும் சுய கௌரவத்தையும் மானத்தையும் நாம் இழக்கவில்லை. அந்த உறுதியை வெளிப்படுத்தும் தேர்தலாகவும் இந்தத் தேர்தல் தமிழ் மக்களுக்கு இந்தமுறை முக்கியம் பெறுகிறது.

போராட்ட ரீதியிலும் அரசியல் கட்டுமான ரீதியிலும் சிறப்[...]ருக்கும் தமிழீழ விடுதலை[...]ளுக்கு மக்கள் வழங்கிய [...]படி சமாதானத்தைப் பெ[...]டன் முன்னெடுக்க இந்தத் [...]மூலம் மக்கள் மீண்டும் ஆ[...] வேண்டியுள்ளது.

சர்வதேச ரீதியில் செ[...]டன் வளர்ந்துள்ள நமது பே[...]திற்கான ஆதரவினை பெ[...]கவும் நாம் இந்தத் தேர்த[...]றிணைந்து நிற்கவேண்டி[...] ஏற்பட்டுள்ளது.

எமது உரிமைகளை [...]டுப்பதற்கான வரலாற்று மு[...]வம் வாய்ந்த கட்டத்தில் [...]புலிகளும் நிற்கிறார்கள் [...]அனைவரும் அறிந்ததே. [...]யில் எமது மக்கள் தமிழ்த் [...]கூட்டமைப்புக்கு வாக்களி[...]மக்களின் தியாகத்திற்கும் [...]கும் பெருமதி சேர்க்க[...]அதற்காக அனைவரும் வ[...]வேண்டும் எனவும் அ[...] மேலும் தெரிவித்தார்.

## புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள
# விளக்குவைத்த குளத்துக்கு மின்விநியோகம் ஆரம்பம்!

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் உள்ள வவுனியா விளக்குவைத்த குளத்திற்கு நேற்று மின்சாரம் வழங்கப்பட்டது.

ஓமந்தை சோதனைச்சாவடி ஊடாக மின்வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றபோது வவுனியாமாவட்ட அரச அதிபர் கே.கணேஷ், வன்னி மாவட்ட இராணுவக்கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சிசிர விஜயசூரிய மின்சாரசபையின் வடபிராந்தியப் பொதுமுகாமையாளர் முத்துரட்ணானந்தம், வவுனியா மின்சாரப் பொறியியலாளர் எஸ்.பிரபாகரன் உட்படப்பலர் கலந்து கொண்டனர்.

13 ஆண்டுகளின் பின் இந்த மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த மின்வழங்கும் நடவடிக்கை படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வன்னியின் முழுப்பகுதிகளுக்கும் வழங்கப்படும் எனவும் மின்சாரசபையின் வடபிராந்தியப் பொதுமுகாமையாளர் முத்துரட்ணானந்தம் இந்நிகழ்வில் உரையாற்றியபோது தெரிவித்தார்.

ஓமந்தை மகாவித்தியாலயம் முதல் ஏ-9 வீதியூடாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதி நோக்கி சுமார் 9 கிலோமீற்றர் தூரம் வரை மின்இணைப்பு வழங்குவதற்கு ஐரோப்பிய யூனியன் 22 மில்லியன் ரூபாய்களை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கடந்தகால தேர்தல்களை விட இம்முறை வன்முறைகள் குறைவு
## சுனந்த தேசப்பிரிய கூறுகிறார்

(கொழும்பு)

கடந்தமுறை தேர்தலில் இடம்பெற்றதிலும் பார்க்க குறைந்தளவிலான வன்முறைச் சம்பவங்களே இம்முறை இடம்பெறும் என தேர்தல் மத்திய நிலையம் எதிர்பார்ப்பதாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையத் தலைவர் சுனந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்திருப்பதாவது-

பொதுத் தேர்தல் தினத்தை அவதானிக்க 20 பேர் கொண்ட விசேட வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சுமார் 4600 பேர்வரையில் மேலும் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படவுள்ளார்கள்.

நாடளாவிய ரீதியில் தேர்தல் கண்காணிப்பாளர்களுடன் பொலிஸ் பாதுகாப்பு அணியும், தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளதால் தேர்தல் தினத்தன்று இடம்பெறக்கூடிய வன்முறைகள் இம்முறை குறைவாகவே இருக்குமென கருதுகிறோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இராணுவ, பொலிஸ் நடவடிக்கைகளை தேர்தல் ஆணையாளரே தீர்மானிப்பர்!

தேர்தல் காலங்களில் இராணுவ, பொலிஸ் நடவடிக்கைகள் குறித்த தீர்மானங்களை தேர்தல் ஆணையாளரே எடுக்கமுடியுமென அமைச்சரவை நேற்று முடிவெடுத்திருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

தேர்தல் காலங்களில் சகலநடவடிக்கைகளையும் தேர்தல் ஆணையாளர் மேற்கொள்வதே சிறப்பாக அமையும் என்பதாலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மதுபானசாலைக[...]
## சனிவரை மூடப்ப[...]

(கொழும்பு)

நாளை இடம்பெறவுள்ள [...]தேர்லை முன்னிட்டு இன்[...]எதிர்வரும் சனிக்கிழமைவ[...]முழுவதும் உள்ள மதுபான[...]கள் மூடப்பட்டிருக்குமென அ[...]அறிவித்துள்ளது.

தேர்தல் நடைபெறும்[...]தேர்தல் முடிவடைந்த பி[...]குழப்பங்களை ஏற்படுத்தும்[...]யில் மதுபான விற்பனை அ[...]விடக்கூடாது என்பதற்காகவே[...]உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்[...]தெரிவிக்கப்படுகின்றது.

## வாக்களிக்க[...]
## போக்குவரத்து ஏ[...]

(யாழ்ப்பாணம்)

நாடாளுமன்றப் பொது[...]தலில் யாழ்.மாவட்டத்தினுள[...]பெயர்ந்த மக்கள் வாக்[...]நிலையங்களுக்குச் சென்று[...]ளிப்பதற்கான ஒழுங்குகள் [...]பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட[...]திச் சேவைச் சங்கம் தெரி[...]ளது.

இடம்பெயர்ந்த வாக்கா[...]அந்தப்பகுதி சிற்றூர்தி[...]ஒழுங்கமைப்பாளர்களுடன் [...]கொள்ளுமாறு தெரிவிக்க[...]றது.

## மட்டு - அம்பாறை...

தனது இருப்பினைத் தொடர்ந்து தக்கவைப்பதற்காக தொடர்ச்சியாக மட்டு - அம்பாறை விடுதலைப் புலிகள் என்ற பேரில் பலவிதமான அறிக்கைகளை வெளியிடுவதோடு தனது தவறான நடத்தைக்கு ஆதரவளிக்க மறுக்கும் மக்களது சொத்துக்களை சூறையாடுதல், அச்சுறுத்தல், வாழ்விடங்களிலிருந்து வெளியேற்றுதல் போன்ற அராஜக நடவடிக்கைகளைத் தனது அடியாட்கள், மாற்றுக் குழுக்கள், தமிழ்த் தேசியத்திற்கு எதிரானவர்கள் ஆகியோரின் துணையுடன் மேற்கொண்டு வருகின்றார்.

எனவே, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து உத்தியோகபூர்வமாக வெளியேற்றப்பட்ட கருணாவால் வெளியிடப்படும் அறிக்கைகள், துண்டுப் பிரசுரங்கள், அறிவித்தல்கள் ஆகியவற்றை தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியீடாக ஏற்றுக் கொள்ளவேண்டாம்.

இந்தக் குழுவால் மேற்கொள்ளப்படுகின்ற நிதிப் பறிப்பு, பொருட்கள் சூறையாடல், வீடுகள், சொத்துகள் அபகரிப்பு என்பன தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கத்தால் தேசவிரோத செயல்களாகப் பிரகடனப்படுத்தப் படுகிறது.

எனவே, மட்டு - அம்பாறை மாவட்ட தமிழ் மக்களே! இந்தக் குழுவினால் விடுக்கப்படும் எவ்வித அறிவுறுத்தல்களையும் பின்பற்ற வேண்டாம்.

இக் குழுவினால் நேரடியாகவும், வேறு புது நிறுவனங்கள் என்ற பெயரிலும் வெளியிடப்படும் அச்சுறுத்தல்கள், அறிவுறுத்தல்களுக்கு நிர்ப்பந்திக்கப்பட்டு காலம் காலமாக வாழ்ந்து வருகின்ற வாழ்விடங்களிலிருந்து வெளியேற வேண்டாம்.

இந்தக் குழுவினரின் அடாவடித்தனத்திற்கு அஞ்சி மட்டு - அம்பாறையை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள உங்கள் அயலவர்கள் எவ்வித அச்சுறுத்தலுமின்றி பாதுகாப்பாக வாழ உற்சாகமளியுங்கள் எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

## திருத்தம்

**நேற்று முதற்பக்க தேர்தல் விளம்பரத்தில் வேட்பாளர்கள் இருவரினதும் இலக்கங்கள் தவறுதலாக மாறிப்பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.**

**இலக்கங்களை மாற்றி திருத்திக் கொள்ளவும். தவறுக்கு வருந்துகிறோம்.**

## ஜாதிக...

தாகவும், தற்போது அவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருதாகவும் வண.அத்துரெலிய ரத்னதேரோ தெரிவித்தார்.

## 5 ஆயிரத்திற்கும்...

காலை அவர் குடும்பத்துடன் அங்கிருந்து வெளியேறியதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு நகரப் பகுதி மற்றும் செங்கலடிப் பகுதிகளில் வெளியிடங்களைச் சேர்ந்தவர்களின் வீடுகள் மற்றும் கடைகள் சூறையிடப்பட்டதாகத் தெரியவருகிறது.

மட்டக்களப்பு நகரில் நேற்று முஸ்லிம் வர்த்தகர்களின் கடைகள் மட்டுமே திறந்திருந்தன.

## புலிகளுக்கு...

நிரந்தர சமாதானத்தை நிலைநாட்டி அச்சமற்ற, யுத்த சூழலற்ற இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு இந்தத் தேர்தலில் ஐ.தே.கட்சியை வெற்றிபெறச் செய்யவேண்டும்.

விடுதலைப் புலிகளுடன் பேசுவதாயின் அதற்கான அனுபவம், பக்குவம், ஆளுமைத்தனம் தேவை. அவை யாவும் எம்மிடமிருக்கிறது. இதனால்தான் இன்று யுத்தம் நிறுத்தப்பட்டு மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றனர். அந்த ஆற்றலும், அனுபவமும் ஜனாதிபதியிடமோ அல்லது ஜே.வி.பி.யினரிடமோ கிடையவே கிடையாது.

கடந்த இரண்டு வருட காலங்களாக இந்த நாட்டைச் சகலதுறைகளிலும் கட்டியெழுப்புவதற்கான பின்னணியை ஏற்படுத்தினோம். இதனைச் சர்வதேச சமூகம் ஏற்றுக் கொண்டதால்தான் இந்த நாட்டின் அபிவிருத்திக்குப் பெருமளவு நிதி கிடைத்துள்ளது.

இம்முறை நடைபெறும் தேர்தலில் ஐக்கிய சுதந்திர முன்னணி படுதோல்வி அடையும். எமது வேலைத் திட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல அனைவரும் எமக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

புது இலங்கையைக் கட்டியெழுப்புவதன் மூலம் மக்களின் வறுமையை அகற்றி அவர்களை செல்வமிக்க மக்களாக வாழ வைக்கவும் முடியும் என அவர் மேலும் தெரிவிதார்.

CATWAS.COM COMPUTER ACADEMY யில்

விடுமுறைகால கணனிப் பயிற்சிக்கான அதிரடி கழிவு
Diploma Courses 75% கழிவு

| Course | Old | New |
|---|---|---|
| MS Office | 4000/= | 1000/= |
| D.T.P | 6000/= | 1500/= |
| Hard Ware | 6000/= | 1500/= |
| Web Page | 6000/= | 1500/= |
| Video Mixing | 8000/= | 2000/= |

- கணனி பற்றிய எதுவித முன் அனுபவமும் இல்லாதவர்களுக்கு கணனியை முழுமையாக கையாள்வதற்கான பயிற்சி
- சிறுவர்கள் விடுமுறையை இன்பமான பொழுதாக செலவிடுவதற்கான கணனி பயிற்சி
- கணனி விளையாட்டுக்கள்
- இப்பிரிவு அனைத்திற்கும் இணைவதற்கான இறுதிப் பதிவுத் திகதி 05.04.2004

26, Somasundaram Avanue, Chundukuli, Jaffna. T.P - 021 222 3805.
(சி-2377)

Information Technology Pa
Ministry of Rehabilitation, Resettlement & Refug
National Housing Secretariat Building,
Near Kachcheri, Kandy Road, Jaffna, Sri Lank
Phone:021-2223641 Director- 021- 22236

தற்போது ஆரம்பமாக உள்ள பாடசாலை விடுமுறையை பிரயோசனமாக கழிக்க விரும்புகின்றீர்களா?

சாதாரண, உயர்தர மாணவர்களுக்கான விடுமுறைக்கால விசேட வகுப்புக்கள்

FIT PROGRAM
Diploma in Fundamental of Information Technology (FI

If not,
Are you FIT in Computer Applications?
Join our FIT Program in IT Park, Jaffna.
(This is a right choice for your bright future)

FIRST INTRODUCTION MEETING:
6th April 2004, 11.00 am at IT PARK HALL
COURSE COMMENCESS ON :08/04/2004

Information: Director
Centre for Information Technology
Further Detai Course Mana

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 01.04.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியடப்ப